சைவ முன்னேற்றச் சங்கம் UNITED KINGDOM கலசம்

"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

SAIVA MUNNETTA SANGAM UNITED KINGDOM

தை – மாசி – பங்குனி – 2026



பொங்கல் புதுவருடம் போகங்கள் பெற்றுலகில்
மங்கலமாய் வாழ்க! மகிழ்ந்து.

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# Satash Community Care









உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அனுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com

மணி 34

# கலசம்
KALASAM

ஒலி 117

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

கலசம்
நிருவாகக் குழு

ஆசிரியர்
க ஜெகதீஸ்வரன்

உதவி ஆசிரியர்கள்
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

விநியோகம்
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

விளம்பரம்
நிருவாகம்
சிவ தம்பு
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

இலங்கைத் தொடர்பு
வை சிவனருட்செல்வர்
தொலைபேசி
0766167547
மின்னஞ்சல்
svarul@yahoo.co.uk

வெளியீடு
சைவ முன்னேற்றச்
சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

மின்னஞ்சல்
email:
smsukkalasam@gmail.com

## என்னதன்று, உன்னது!

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" என்று அருளினார்கள் அப்பர் சுவாமிகள். இறைவனை வழிபடப் போகும்போது, அபிடேகத்துக்கான பொருள்கள், மலர் என ஏதாவது கொண்டுபோகவேண்டும் என்பதையே இது குறிக்கிறது. அருச்சனை செய்வதற்கும் தேங்காய், பழம் எனக் கொண்டு செல்வது வழக்கம்; மரபு. மேற்கு நாடுகளில், சில கோயில்களில் அபிடேகப் பொருள்கள் அளவுக்கு அதிகமாகக் கொண்டுவரப்படுவதும் அவை வீணாகி வீசப்படுவதும் உண்டு. இதுபற்றி முன்பொருமுறை குறிப்பிட்டிருந்தோம். சில விசேட திருவிழாக் காலங்களில் நிவேதனம் செய்வதற்கு என வடை, பொங்கல் போன்ற பதார்த்தங்களையும் பத்தர்கள் கொண்டு வருவார்கள். அவற்றை நிவேதனமாக அர்ப்பணித்தபின் அனைவருக்கும் ஆலயத்தில் பகிர்ந்து கொடுக்கப்படும்; பரிமாறப்படும்.

அப்படிப் பரிமாறும்பொழுது இது நான் கொண்டுவந்தது, அது நீ கொண்டுவந்தது என்ற உரையாடல்களைக் கேட்க முடியும். அது தவிர, அருச்சனைக்கெனக் கொடுத்த தட்டிலுள்ள தேங்காயோ பழமோ மாறி வந்துவிட்டாலும் சில வேளைகளில் அது பெரிய பஞ்சாயத்தாக மாறிவிடும் வழக்கமும் உண்டு.

கோயிலுக்கென நாம் கொண்டுவரும் பொருள்கள் அனைத்தும் கோயில் வாசல்வரையே நம்முடையவை. கோயிலுக்குள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டால் அந்தக் கணத்திலிருந்து அவை இறைவனுக்கு உரியவை; இறைவனுடையவை. அதுபோல, திருவிழா உபயங்கள் செய்யும்போதும் என்னுடைய பணம், என்னுடைய திருவிழா என்று தற்பெருமைக்காகவும் பகட்டுக்காகவும் செய்வதில் எந்தப் பயனும் இல்லை. இறைவன் நமக்குக் கொடுத்த செல்வத்தைத் திருப்பி இறைவனிடமே அர்ப்பணித்து அது பலருக்கும் பயன்படும்படி செய்வதுதான் நாம் செய்யவேண்டிய தருமம்.

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

என்ற பாடலுக்கமையத் தூய உள்ளத்தினராக இறைவழிபாடு இயற்றி, எதுவும் என்னதன்று எல்லாம் உன்னதே என்ற பக்குவத்தை அடைய நாம் பழகவேண்டும். இறைவழிபாட்டின் பயனும் அதுதான்.

**க ஜெகதீஸ்வரன், ஆசிரியர்**

# இந்த இதழில்


ஆற்றேன் 03

பெரிய இடத்துத் தவறுகள் கந்தபுராணச் சிந்தனைகள் 07

மனித உடல், உளச்சமநிலை பேணலில் யோகா 10

ஞானத்தாழிசை 13

செவ்வாய் - பயணக் கட்டுரை 16

சிவபெருமானின் தாய் 18

திருக்குறள் கதைகள் 27

கனவுப் பயணம் 29

Saiva School of Hinduism 31

ஆறுமுகநாவலர் 36

பொங்கல் திருநாள் 39

பாஞ்சாலி சபதம் 43


**அட்டைப்படம்: பொங்கல் விழா**

**வடிவமைப்பு - குகன்**

**கலசம் இதழ் படித்தபின் அதை நண்பருக்கு அல்லது நூல்நிலையத்துக்குக் கொடுங்கள்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**

# ஆற்றேன்



## திருமுருக கிருபாநந்தவாரியார்

உடம்பு என்பது நாமன்று. பழவினைக்கேற்ப நாம் சுமக்கும் சட்டை அது. சாறு நீக்கிய கரும்புச் சக்கை, தோலினால் மூடிய புண். இதனைச் சுமந்து திரிவது ஆற்றொணாத துன்பம். சிவபோகத்தைப் பெற இந்த உடம்பைப் பயன்படுத்துவதே இன்பம். அந்த நெறியை நமக்கு உணர்த்துகிறது திருவாசகம்.

தன்னை அறிந்தவனே தத்துவஞானியாகின்றான்; தன்னை அறிந்தவன் தலைவனையும் அறிகின்றான். எதனை எதனையோ ஆராய்கிறார்கள்; கடலை ஆராய்கிறார்கள்; வானை ஆராய்கிறார்கள்; மலையை ஆராய்கிறார்கள்; ஆனால் தன்னைப்பற்றி ஆராயத் தெரியவில்லை.

திருமூலர் கூறுகின்றார்:

“தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை யறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே”

“என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை அறிந்திட் டிருத்தலும் கைவிடா
தென்னையிட் டென்னை உசாவுகின் றானே”

இந்த உடம்பையே தான் என்று எண்ணி மயங்குவோர் பலர், “நான் இளைத்துவிட்டேன்! நான் கனத்துக்கொண்டேன்” என்று கூறுகின்றனர். இந்த உடம்பு நல்வினை தீவினையின் காரணமாக இறைவன் தந்த ஒரு கனமான சட்டை.

**“நட்டு” கழன்றது:**

ஒரு முதலாளி தன்னிடம் பஸ் ஓட்டும் டிரைவரைப் பார்த்து “ஏன் தாமதமாக வந்தாய்?” என்று கேட்டார். அந்த டிரைவர், “ஆறாவது மைலில் எனக்கு ஒரு நட்டு கழன்றுவிட்டது” என்றான். அவனுக்கா ‘நட்டு’ கழன்றுவிட்டது? அவன் ஓட்டுகின்ற பஸ்ஸுக்குத்தானே கழன்றுவிட்டது. அந்நியமான பஸ்ஸை அநந்நியமாகப் பாவித்து “எனக்கு நட்டுப் போய்விட்டது” என்றான். அதுபோல் நமது சட்டையாகிய உடம்பு இளைத்துவிட்டால், “நான் இளைத்துவிட்டேன்” என்கிறார்கள்.

**நாம் என்பது எது?**

மண், புனல், தீ, காற்று, வெளி என்ற ஐம்பெரும் பூதங்களும் நாமன்று. செவி, கண், நாசி, வாய், மெய் என்ற பொறிகள் நாமன்று. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்கள்

நாமன்று. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் நாமன்று. பின்னர், நாம் என்பது எது?

தாயுமானார்க்கு மௌனகுரு உபதேசிக்கின்றார்:

பாராதி பூதம் நீயல்லை உன்னிப்
பார் இந்திரியம் கரணம் நீயல்லை
ஆராய் உணர்வு நீயென்றான் - ஐயன்
அன்பாய் உரைத்தசொல் ஆனந்தம் தோழி!

எனவே இவற்றையெல்லாம் ஆராய்ந்து அறிகின்ற அறிவுதான் நாம். இந்த உடம்பு நாமன்று.

**உடம்புக் கட்டை:**

திருடுகின்ற துடுக்கான மாட்டுக்கு ஒரு கட்டையைக் கயிற்றால் அதன் கழுத்தில் தொங்க விடுவார்கள். அந்த மாடு அந்தக் கட்டையைச் சுமந்துகொண்டு அலையும்.

அதுபோல நாம் செய்த தீவினை, நல்வினைக்கு ஏற்ப இந்த உடம்பான கட்டை நமக்கு அளிக்கப்பட்டது.

"அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி"

என்பது திருவாசகம்.

இந்த உடம்பு மிகுந்த கனமுள்ளது. நெடுங்காலமாக நாம் சுமந்து அலைகின்றோம். இந்த உடம்பு வந்ததன் பயனாக உடம்புக்குள் உள்ள உத்தமனைக் கண்டு பிறவியின் பயனைப் பெற்றுவிடவேண்டும். அப் பயனைப் பெறாது வீணே இந்த உடம்பைச் சுமந்து அலைதல் அறிவுடைமையாகாது.

இந்த உடம்பை நாம் சுமக்கவில்லையானால் நான்குபேர் சேர்ந்து சுமக்கவேண்டும். அந்த நால்வரும் சிறிது நேரந்தான் சுமப்பர்.

உடம்பு உள்ளபோதே உடம்பினாலாய பயனைப் பெற்றுவிட்ட உத்தம ஞானிகள் இந்த உடம்புடன் வாழ்வதை விரும்புவதில்லை. உடம்பு நீங்குவதைப் பற்றியும் கவல்வதில்லை.

**உடம்பும் கரும்பும்:**

கரும்பை ஒரு ஆண்டு முழுவதும் உழைத்துப் பயிரிடவேண்டும். அங்ஙனம் வளர்ந்து வெட்டிய கரும்பை ஆட்டிச் சாறு எடுத்துச் சர்க்கரைக் கட்டியைப் பெற்றபின், சாறு நீங்கிய சக்கையை எரிக்கின்றபோது "என் கரும்பு எரிகின்றதே" என்று யாரும் வருந்தமாட்டார்கள். அதுபோலக் கரும்பனைய இந்த உடம்பை வருத்தி உடம்பாலாகிய சிவபோகத்தைப் பெற்றுவிட்ட பெரியோர் உடம்பு நீங்குவது பற்றி வருந்துவதில்லை.

கரும்பாட்டிக் கட்டிச் சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயராண் - டுழவார்

வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்கால் பரிவ திலர்.

என்பது நாலடி

**உடலின் இயல்பு:**

இந்த உடம்பு புண்மயமானது, மலசலம் நிறைந்தது. ஒன்பது வாயில்களிலும் மலம் வழியக்கூடியது.

"மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை"

என்பது திருவாசகம். புண்களையும் புழுக்களையும் தோலினால் போர்த்து மூடி வைத்துள்ளது.

"புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி" - திருவாசகம்

அசுத்தமும் நோயும் புழுக்களும் நிறைந்த உடம்பு,

"தோலெலும்பு சீநரம்பு பீளைதுன்று கோழை பொங்கு
சோரி பிண்ட மாயுருண்டு வடிவான
தூலபங்க காயம்வம்பி லேசுமந்து நான்மெலிந்து
சோருமிந்த நோயகன்று துயராற"

என்று கூறுகிறார் அருணகிரிநாதர்.

இந்த உடம்புடன் நெடுங்காலம் இருக்கவேண்டும் என்று நாம் ஆசைப்படுகின்றோம். இது அறியாமை.

**ஆற்றொணாத் துன்பம்:**

மாணிக்கவாசக சுவாமிகள் இந்த உடம்புடன் இருப்பதுபற்றி மிகவும் வருந்துகின்றார், வெறுக்கின்றார்.
'ஆற்றேன்' என்கின்றார். 'ஆற்றேன்' என்ற சொல்லுக்குப் "பொறுக்கவில்லையே" என்பது பொருள். தாங்கமுடியாத வேதனையைக் குறிக்கின்ற சொல் 'ஆற்றேன்' என்பது.

அப்பர் சுவாமிகளுக்கு மிகக் கொடிய சூலைநோய் பற்றியது. குடர் சுருண்டு வடவைக்கனல்போல் வாட்டியது. அந்த வெப்ப நோயை என்னால் தாங்கமுடியவில்லையே என்று அப்பெருமான் வருந்தி இறைவனிடம் முறையிடுகின்றபோது, இந்த 'ஆற்றேன்' என்ற சொல்லைக் கூறுகின்றார்.

"குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன்"

இனி, ஔவையாரும் பொறுக்கமுடியாத நோய் கொடிது என்று கூறும் இடத்து இந்தச் சொல்லை இடித்துக்கூறுகின்றார்.

"அதனினும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்"

இத்தகைய கொடுமையைப் பொறுக்கமுடியவில்லையே என்று கூறும் சொல் 'ஆற்றேன்' என்பது.

அந்தச் சொல்லை இங்கே கூறுகின்றார் மாணிக்கவாசகர்.

இந்த உடம்புக்குள் என்னால் இருக்க முடியவில்லையே என்று இரங்கி உரைக்கின்றார்.

"வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப ஆற்றேன்"

(விடக்கு - மாமிசம்)

புண்மயமான பொல்லாத உடம்புள் கிடப்பதற்கு வருந்துவது ஆன்றோர் இயல்பு. இதனை விடாப்பிடியாக வைத்துக்கொண்டு மகிழ்கின்றோம் நாம். நமது இயல்புக்கும் ஆன்றோர் இயல்புக்கும் எத்தனை தூரம்?

எனவே, அறிவுடையவர்கள் இந்த உடம்புடன் நெடுநாள்கள் இருக்கவேண்டும் என்று எண்ணாமல், இந்த உடம்பினால் ஆய பயனாகிய சிவபோகத்தைப் பெற்று உய்யவேண்டும். அந்த நெறியை நமக்குக் காட்டி உதவுகின்ற நூல் திருவாசகம்.

நன்றி: திருவாசகத் தேன் *1959*

# சனியைக் கண்டு பயப்படாதே

தெரிந்தும் தெரியாமலும் நாம் பாவங்களைச் செய்கிறோம். மற்றவர் மனத்தை நோகடிக்கிறோம். இதிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறையை விளக்கினார் காஞ்சி மகாபெரியவர்:

சனிக்கிழமையன்று நீராடியதும் கைப்பிடியளவு பச்சரிசியைக் கையில் வைத்தபடி சூரியபகவானை வழிபடுங்கள். அதன்பின் விநாயகர் கோயிலுக்குச் செல்லுங்கள்.

அரசமரத்தடி விநாயகராக இருந்தால் மிகவும் நல்லது. மூன்றுமுறை வலம் வந்து மரம், கோயிலைச் சுற்றிப் பச்சரிசியைத் தூவுங்கள். அதை எறும்புகள் எடுத்தாலே முன்வினைப் பாவம், தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவம் நம்மைவிட்டு விலகும்.

அதுமட்டுமா? எறும்புகள் அதை முழுமையாகச் சாப்பிடாமல் மழைக்காலத்துக்குச் சேமித்து வைக்கும். ஆனால் பச்சரிசி கெட்டுப்போகுமே என்ற சந்தேகம் வரலாம். எறும்பின் எச்சில் படுவதால் அரிசி கெடாமல் ஓராண்டு அப்படியே இருக்கும்.

எறும்புகளுக்கும் உணவளித்த புண்ணியமானது ஒரு நாளில் முடியாது. ஆண்டுக் கணக்கில் உங்களைத் தொடரும். இரண்டரை ஆண்டுக்கு ஒருமுறை நடக்கும் சனிப் பெயர்ச்சியின்போது இதைச் செய்வது நல்லது. ஒரு எறும்புக்கு உணவளித்தாலே நூறுபேருக்கு உணவிட்ட புண்ணியம் சேரும். ஏழரைச் சனி, அஷ்டமச் சனி, கண்டச் சனி, அர்த்தாஷ்டமச் சனியால் வருந்துபவர்கள் இதைச் செய்தால் பலன் கிடைக்கும். தர்மம் தலை காக்கும் என்பதாலேதான் அரிசி மாவால் கோலம் இடுகிறோம்.

நன்றி:தினமலர் டிசம்பர் *29, 2023*

# பெரிய இடத்துத் தவறுகள்

கந்தபுராணச் சிந்தனைகள்

Dr ச சிவலோகநாதன்

அநேகம் தொழிலாளிகளின் உடலுழைப்பை நிர்வகிக்கும் பெரிய தொழில் நிறுவனங்களை நடத்துபவர்கள் சொல்வார்கள்: "ஒரு சிறிய தொழிலாளி பிழைவிட்டால், ஒருவனின் நாள்வேலை வீணாகும். ஒரு அதிகாரி பிழைவிட்டால் அவருக்குக் கீழே வேலை செய்யும் அவ்வளவு பேரின் வேலையும் வீணாகும்". உலகாயதத்தில் உடலுழைப்பைப் பொறுத்தமட்டிலே இவ்வாறாகப் பிழைகள் மேல் மட்டத்துக்குச் செல்லச் செல்ல அதன் தாக்கம் அதிகரிக்குமானால், ஆன்மிகத்திலே அவற்றின் தாக்கம் எவ்வாறிருக்கும்? கந்தபுராணத்தை உற்று நோக்கினால் இரண்டு பெரிய முனிவர்களான காசிபரும் மாகதரும் விட்ட தவறுகளே பேரழிவுக்கக் காரணமாயின என்பது தெரியவரும். இத்தவறுகளை ஆய்ந்து அவற்றை நீங்கும் வழிகளை ஆராய்வோம்.

சுக்கிராசாரியரின் ஏவுதலின்படி அசுரேந்திரனின் மகள் மாயை, தவம் செய்யும் காசிப முனிவரைச் சூழ்கிறாள். திருமகளிலும் மேலான ஓர் அழகிய உருவத்தைக் கொண்டு சென்று காசிபரை மயக்குகிறாள். காமத் தீயைக் கிளப்புகிறாள். காமத்தில் வாடிய காசிபருக்கு அறிவு மழுங்கி விடுகின்றது. "அழகிய உடல் வாட நான் தவஞ்செய்தது உன்னைச் சேர்வதற்கே!. நான் எண்ணியவாறே நீயும் எளிதில் வந்தாய். தவம் செய்ததன் பயன் சேர்ந்தது. இனிமேல் நான் தவம் செய்யவேண்டுமோ? இல்லை!" என்று அறிவு மயங்கிய காசிபர் சொல்கிறார்.

"ஐதின் மேனி அலசுற யான் தவஞ்
செய்த திங்குனைச் சேருதற் கித்திற
நொய்தின் மேவினை நோற்றதற் குப்பயன்
எய்தி யுற்ற தினித்தவம் வேண்டுமோ!"    மாயைப் படலம் 71

இவ்வாறு சித்தம் கலங்கிக் கூறிய காசிபர் மாயையிடம் பலவாறு அன்புடன் பேசி அன்றிரவு அவளுடன் கூடுகிறார். சூரன், சிங்கன், தாரகன், அசமுகி என்ற நான்கு பிள்ளைகளும் இலட்சக்கணக்கான அசுர சேனைகளும் தோன்றுகின்றன. பிள்ளைகள் தாயாரின் உபதேசப்படி சிவபெருமானைக் குறித்துப் பெரு வேள்வி செய்கிறார்கள். சிவபெருமான் அவர்களுக்குமுன் தோன்றுகிறார். அவர்கள் கேட்டபடி அளவில்லாத வரங்களைக் கொடுக்கிறார். வரங்கள் பெற்றபின் சூரன் தம்பிமார்களையும் அழைத்துக்கொண்டுபோய்த் தந்தையாராகிய காசிபரை வணங்கித் தாம் பெற்ற பெரு வரங்கள்பற்றிக் கூறுகிறார்கள். அவர் அதைக் கேட்டு, "இந்திரனின் வாழ்வுக்கு முடிவு வந்ததோ? தேவர்களுக்கெல்லாம் துன்பம் வந்ததோ? எம் வேத ஒழுக்கம் மாறியதோ? என் சிவபெருமானின் அருள் இப்படியோ?" என்று நினைத்தார்.

"தந்தை கேட்டுச் சதமகன் வாழ்வினுக்கு
அந்த மாகியதோ வண்டருக் கிடர்
வந்ததோ வெம் மறைநெறி போனதோ
எந்தை யாரருள் இத்திற மோவென"

வரம்பெறு படலம் 40

இவ்வாறு காசிபர் தன்னுடைய தவறினால் ஏற்பட்ட விளைவுகளை உணர்கிறார்.

காசிபமுனிவரின் தவறுபோன்றே மாகதரின் தவறும் ஏற்படுகிறது. அசுரகுலம் உய்யவேண்டிச் சுக்கிராச்சாரியாரின் ஆலோசனைப்படி கொடிபோன்ற அழகுடைய விபுதை என்ற பெண்ணை மாகதருடன் கூடிப் புத்திரனைப் பெறுமாறு அசுரேந்திரன் அனுப்புகிறான். மாகதரின் தவ வலிமையைக் கண்ட விபுதை அவருக்கச் சமீபமாக இருந்து, அவரைக் கூடுதல் வேண்டித் தானும் தவஞ்செய்யத் தொடங்கினாள். தவத்திலே பலகாலம் இருந்த மாகதரை ஒருநாள் காமத்தீ பீடித்துக்கொள்கிறது. மந்திரத்தைச் சொல்லும் செயலை மறந்து மனத்தில் கொண்ட தியானப் பொருளை இழந்து காமம் என்ற சூழும் வலையுட்பட்டுச் சோர்ந்து இறந்தவனைப்போல் மயங்கி, "இனிய உயிரை மட்டும் சுமந்துகொண்டு இன்று இவ்வாறான கலவியைப் பெறுவேனானால் நான் பிறந்த பயனைப் பெற்றவன் ஆவேன்" என்றார் அந்த முனிவர்.

மறந்தனன் மனுவின் செய்கை மனப்படு பொருளை வாளா
துறந்தனன் காமம் என்னும் சூழ்வலைப் பட்டுச் சோர்வுற்
றிறந்தனன் போல மாழ்கி இன்னுயிர் சுமந்தான் இன்று
பிறந்தனன் இனைய கூட்டம் பெற்றிடு வேனேல் என்றான்

கயமுகன் உற்பத்திப் படலம் *25*

இவ்வாறு வருந்திய மாகதரின் முன்னே விபுதை தோன்றுகிறாள். முனிவர், "பெண்ணே! நீ என்னிடம் வரக் காரணம் என்ன?" எனக் கேட்டார். அவளும், "உங்களைக் கணவராகப் பெறுவதற்குப் பலகாலம் தவம் செய்தேன். அத்தவம் இன்று முற்றுப்பெற்றது. அதனாலேயே உங்களிடம் வந்தேன்" என்றாள். முனிவர் மனம் மகிழ்ந்து அவளுடன் கூடினார். கொடிய கஜமுகாசுரன் அவர்களுக்குப் புத்திரனாகத் தோன்றினான். அவனோடு பல வீரர்களும் தோன்றினார்கள். அவர்களுடன் சேர்ந்து கஜமுகாசுரன் பெரிய ஆரவாரம் செய்தான். தந்தையாராகிய மாகதரும் தாயாராகிய விபுதையும் அவ்விடத்தை விட்டகன்றனர். பழைய உணர்வு தோன்ற மாகதர் நிகழ்ந்ததை எண்ணி வாளா நின்று "என்ன செய்துவிட்டேன்!" என இரங்கி இனி என்ன நடக்குமோவென ஏக்கம் கொண்டு, விதி உயிர்களை நடத்தும் முறையை நினைத்து வருந்தினார். விபுதையிடமிருந்து அவள் அசுரேந்திரனால் அனுப்பப்பட்டதை அறிந்தார். உலகில் உள்ள உயிர்களுக்கும், மேலான தேவர்களுக்கும் நான் இன்று துன்பத்தைச் செய்துவிட்டேன் எனக் கலங்கினார். மாகதர் சிறிதுநேரம் வருந்தி, பின் தெளிந்து, "பெண்ணே! உம் அரசனான அசுரேந்திரனின் துன்பமும், நீ எண்ணிவந்த எண்ணமும், மோட்சம் அடைய நான் பல நாள் எண்ணிச் செய்த தவமும், மண்ணுலகம் முழுவதும் தேவர் உலகம் எல்லாமும் ஒருங்கே முடிந்தன. இனி நீ விரைவாகச் செல்" என்று கூறினார்.

சிலபொழு திரங்கித் தேறிச் சேயிழை மடந்தை நுங்கோன்
மெலிவுநின் எண்ணந் தானும் வீடுபெற் றுய்ய யான்முன்
பலபகல் புரிந்த நோன்பும் பாருல கனைத்தும் வானோர்
உலகமு முடிந்த வேநீ ஒல்லையிற் போதி என்றான்

கயமுகன் உற்பத்திப் படலம் *42*

இவ்வாறு இரண்டு பெரிய முனிவர்களும் காமத்தினால் தாமும் தவறுண்டு உலகையும் இன்னலிற் தள்ளினார்கள். அதைத் தவிர்க்க வழி இல்லையோ எனக் கேட்டால் அதன் விடையையும் கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் சொல்கிறது. நினைத்தற்கரிய பிரமசரிய ஒழுக்கத்தில் ஒழுகுவதும், இல்வாழ்வில் நிற்றலும், காட்டில் சென்றிருத்தலும், துறவில் வாழ்வதும்

என்ற நான்கு நிலைகளுள் வாழ்க்கையை அமைத்தலே அதைத் தவிர்க்கும் முறையெனக் கந்தபுராணம் சொல்கிறது. குச்சக முனிவர் தன்னுடைய புத்திரரான மிருகண்டுய முனிவருக்குக் கூறிய அறிவுரைமூலம் கந்தபுராணம் இதனைச் சொல்கிறது. "மனைவியுடன் சேர்ந்து இன்பம் அனுபவிப்பதற்குரிய இல்லற ஒழுக்கத்தை முதலிலே மேற்கொள்ளாமல், தூய்மையான நல்ல தவநெறி நிலையை அநுசரிக்கத் தொடங்கினால், மாயத்தால் மிக்க காம நஞ்சு வந்து நெருங்கினால் உன்னைச் சார்ந்த விதி வந்தாலும் தடுக்க முடியுமா? முடியாதே!" என்று குச்சக முனிவர் மிருகண்டுயருக்கச் சொல்கிறார்.

ஆயிழையொ டின்புறும் அறத்தை முதலாற்றாய்
தூயதவ நன்னெறி தொடங்கல் புரிவாயேல்
மாயைமிகு காமவிடம் வந்தணுகின் அம்மா
மேயவிதி காக்கினும் விலக்கியிட லாமோ

மார்க்கண்டேயர் படலம் *48*

இவ்வாறு சொன்ன குச்சகர் வசிட்ட முனிவரும் அருந்ததியும் பெருமை பொருந்திய உலகில் மிக்க வலிமை பொருந்தியவராக இருந்ததையும் சுட்டிக்காட்டிப் பெண்ணோடு சேர்ந்திருக்கும் வலிமையைச் சொல்கிறார். இவ்வாறு காமம் என்ற ஒரு பெருந் தீமையின் வலிமையையும் அதன் தீர்வையும் கந்தபுராணம் சொல்லா நிற்கிறது.

# வீணாக்கும் கலாசாரம்

ஒரு குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால் அந்தக் குடும்பம் துயரில் ஆழ்ந்துவிடும். பிரிந்தவர் கணவரோ, மனைவியோ, குழந்தையோ என யாராக இருந்தாலும் அவர்கள் சில ஆண்டுகளோ, பல ஆண்டுகளோ அந்தக் குடும்பத்தில் வாழ்ந்தவர்கள் என்பதால் அந்தக் குடும்பம் கவலையில் மூழ்கியிருக்கும். அந்தக் குடும்பத்துக்குச் சென்று துக்கம் விசாரிப்பது நல்ல பண்பு; அவசியமானதும் கூட. உறவினர்கள், நண்பர்கள் என்று பலரும் தமது அநுதாபம் தெரிவிப்பார்கள். அது நமது கலாசாரம். ஆனால்,
மிக நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மட்டுமே உணவு கொண்டுவருவார்கள். அதையும் வீட்டிலே தயாரித்து எடுத்து வருவார்கள். அந்தக் குடும்பத்தில் எத்தனைபேர் அந்தச் சமயத்தில் இருக்கிறார்கள், வேறு யாராவது உணவு கொண்டுவருகிறார்களா என்று விசாரித்த பின்னரே உணவு கொண்டுவரப்படும். அதுதான் தாய்நாட்டில் வழக்கம்.

இப்போது உணவு கொண்டுவருவதை ஒரு முக்கியமான கடமை என்று கற்பனை செய்து, அந்த வீட்டுக்குத் துக்கம் விசாரிக்க வருவோர் எல்லோரும், நண்பர்கள், எப்போதோ ஓரிரு சமயம் பழகியவர்கள் என்று அனைவரும் உணவு கொண்டுவருவது பழக்கமாகிவிட்டது. உணவையும் வரும் வழியில் எங்காவது ஒரு (ஒரே) உணவகத்தில் வாங்கி வருகிறார்கள்.

அளவுக்கு அதிகமாக உணவு வருவதால் அதை உண்பதோ, சேமித்து வைப்பதோ இயலாது. உணவும் கெட்டுவிடும். குடும்பத்தின் துயரைத் துடைக்க வருபவர்கள் அந்தக் குடும்பத்துக்கு உதவுகிறோம் என்று நினைத்து மேலும் தொல்லை கொடுக்கிறார்கள். இந்தக் கலாசாரம் உணவை வீணாக்கவும் உணவகங்களின் வருமானத்தைப் பெருக்கவும் உதவுகிறதே அன்றி வேறு எந்த விதத்திலும் பயனளிப்பதில்லை. இந்த வீணாக்கும் கலாசாரம் மாறவேண்டும்; நல்லவர்கள் சிந்திக்கவேண்டும்.

# மனித உடல், உளச்சமநிலை பேணலில் யோகக்கலையின் பங்களிப்பு

ஆக்கம்: ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர் - நல்லூர்)

உலகில் நிகழும் பிறப்புகளில் மனிதப் பிறப்பானது காத்திரத் தன்மையானது. சாதாரணமாக மனித உடல், உளக் கூற்றியலை ஆய்வுக்குட்படுத்தினால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாக அமைப்பு, தோற்றம், வளர்ச்சி, மாற்றம், தேய்வு, மறைவு என்றவாறு வேறுபட்டிருப்பதனை அறிய முடியும். இவ்விகாரங்களை நுணித்தாய்வு செய்கையில் ஒவ்வொரு கணப்பொழுதும் அவை மாற்றம் அடைந்துகொண்டிருக்கின்றமையை ஆய்வுகள் உறுதிசெய்கின்றன. அதுமாத்திரமன்றி கால, தேச, வர்த்தமானங்களுக்கேற்பவும் அடிப்படை அலகுகளில் கூட மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றமையும் கவனிக்கத் தக்கது. வாழ்வியலின் சீரான - தொடர்ச்சியான பயணிப்பிற்கு உடல், மனம், ஆன்மா (மூச்சு) ஆகிய மூன்றின் இயக்கப்பாடுகளும் ஒன்றுக்கொன்று ஒத்ததன்மையுடையதாகவும் ஒருங்கிசைவானதாகவும் இருக்க வேண்டும். பொதுப்படையாக நோக்கினால், நாம், உடலியல் சார் அமைப்பு, அதன் இயக்கப் பாடுகளில் ஏதேனும் குறைபாடுகள், பாதிப்புகள் ஏற்படும்போது அவற்றை புரிந்துகொண்டு கருமமாற்றும் செயற்பாடுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை, உளக்கட்டமைப்பைப பேணி, புரிந்து எதிர்வினையாற்றும் செயற் பாடுகளுக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்காக ஆன்மிகப் பண்புகளை பூண்டொழுகி உயிராற்றலை வளம்படுத்தும் பொறி முறைகளுக்கும் கொடுப்பதில்லை என்கின்ற யதார்த்தமும் வெளிப்படையானது. மேலும், மனிதமனதின் இயக்கப்பாடுகள் பற்றிய ஆய்வுத்தளத்தில் மனவியல்சார் விடயங்கள் பற்றிய புரிதல்கள் உளவியல் வல்லுனர்களிடையே பலவித கருத்துநிலை-களைத் தோற்றுவித்தாலும் பொதுமைத் தன்மையான புலங்களில் ஒன்றுபடுவதை அவர்களது ஆய்வுப்பரப்புகள் வெளிப்படுத்தி நிற்பதனையும் நோக்கமுடியும். உடல் அமைப்பு அதன் செயற்பாடுகள் பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுகளில் மருத்துவவியல் துறைசார் புலமையாளர்கள் இடையே நிறுத்திட்டமான முடிவுகளில் ஒருங்கிசைவை அவதானிக்க முடிகின்ற அதேசமயம் உளம் பற்றியதான ஆய்வுப்பரப்பில் பல்வேறு விதமான முரண்நிலைகள், ஐயப்பாடுகள் காணப்படுகின்றமையானது மனம் என்ற எண்ணக்கருவானது ஆய்வுத்துறைகளுக்கு சவால் நிறைந்ததாக திகழ்கின்றது என்பது புலனாகும். எது எப்படியென்றாலும் உடல், உளச் சமநிலை பேணல், வாழ்க்கையின் பேண்தகு நிலைக்குமட்டுமல்ல ஆன்மிக ரீதியிலான பண்பியல்களின் உயர்ச்சிக்கும் அத்திபாரமாகும் என்ற அன்றைய மெய்ஞ் ஞானிகளான யோகிகள், சித்தர் பெருமக்களின் அடிப்படைக் கோட்பாட்டு நெறிமுறைகளுடன் இன்றைய விஞ்ஞானிகளது கருத்தியல்களும் ஒத்துப்போகின்றமையை அவதானிக்கலாம்.

எமது உடலானது அமைப்பு ரீதியாக ஒன்பது மண்டலங்களாக - தொகுதிகளாக (Systems) பிரிக்கப்படுகின்ற அதேவேளை, தொழிற்பாட்டு ரீதியிலும் இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று இடைத் தொடர்புள்ள வையாகவும் காணப்படுகின்றன. அவை, இரத்த ஓட்டமண்டலம் (Circulatory System), சமிபாட்டு மண்டலம் (Digestive System), இனப் பெருக்க மண்டலம் (Reproductive System), அகஞ்சுரக்கும் மண்டலம் (Endocrine System), சுவாசமண்டலம் (Respiratory System), நிணநீர் மண்டலம் (Lymphatic System), கழிவகற்றும் மண்டலம் (Excretory System), நரம்புமண்டலம் (Nervous System) எலும்பு - தசை மண்டலம் (Musculoskeletal System) என்றவாறாக ஒன்பது பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் நெருங்கிய தொடர்புடையதான

உடலில் தலையாயதாக ஐந்து உறுப்புக்கள் காத்திரத்தன்மை பொருந்தியவையாக விளங்குகின்றன. மூளை, இதயம், கல்லீரல், நுரையீரல்கள், சிறுநீரகங்கள் என்பவையே அவையாகும். ஏனையவை துணை உறுப்புகளாக அமைகின்றன. இங்கு உடலியற் செயற்பாடானது சங்கிலித்தொடர் போன்றது. ஒரு மண்டலத்திலோ அல்லது ஏதேனும் உறுப்பு ஒன்றிலோ ஏற்படும் பாதிப்பு ஏனையவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்தவல்ல வையாகும். மேலும் உடலியக்கப்பாட்டில் மனவியற்கோலங்களும் முதன்மை பெற்றிருப்பதனை ஆய்வுக்குட்படுத்தும் போது, மனதின் செல்நெறிக்கேற்பவே மூளையும் அதனுடன் தொடர்புடையதான நரம்புத் தொகுதிகளும் இயங்குவதுடன் அவற்றின் கட்டளைக்கேற்ப நாளமில்லாச்சுரப்பிகளும் தூண்டப்பட்டு நொதியங்களை சுரக்கின்றன. இவற்றின் துணையோடுதான் அங்கங்களும் அவற்றோடு பின்னிப் பிணைந்துள்ள தொகுதிகளும் இயங்குகின்றன என்பதை அறிய முடியும். மனதிலிருந்து மேற்கிளம்புகின்ற கவலைகள், கோபங்கள், பேராசைகள், அதீத பயங்கள், பதட்டங்கள், மனஅழுத்தங்கள், எதிர்மறை எண்ணங்கள் என்பவை உடலியற்றொழிற்பாட்டில் நேரடித்தாக்கம் செலுத்துகின்றன. இதனால் உடலி யக்கப்பாடுகள் பாதிப்படைவதுடன் ஈற்றில் நோய்களாக பரிணமித்து வாழ்வியற் சமநிலையை சீர்குலைக்கின்றன. எனவே இயன்றவரை மனதினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் பேணுவதை உறுதிப் படுத்தும் போது உடற்பிணிகள் இலகுவில் நம்மை நெருங்கமாட்டா. இதன்மூலம் நேர்விகிதசமனான நிலையில் மனவியல் சார் பாதிப்புக்களானவை உடலியற்பாதிப்புகளையும் ஏற்படுத்தவல்லவை. அதாவது உளத் தொழிற்பாடே உடலியற்தொழிற்பாட்டையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது என்பதுடன் யோகத்தில் வகுத்துரைக்கப் பட்டுள்ள மனரீதியான அடிப்படை (தியானம்) பயிற்சிகள் மூலம் உடலியற்றொழிற்பாட்டை சீரமைக்கலாம் என்ற விடயமும் இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

தற்கால சூழ்நிலையில் உளநெருக்கீடுகள், மனஅழுத்தம், பதகளிப்பு போன்ற உளப் பாதிப்புகளால் பாதிக்கப்படுவோர் அதிகரித்து வருகின்றமை அவதானிக்கத்தக்கது. இதற்கான முக்கிய காரணம், நமது வாழ்வியல் கோலங்களில் ஏற்பட்ட மாற்றங்களேயாம். உளப் பாதிப்புக்களானவை பல்வேறு மாற்றற்கடினமான பாரிய உளநோய்களையும் அதன் வழியாக உடற்பாதிப்புகளையும் ஏற்படுத்துவதுடன் ஆயுளையும் அற்பமாக்கி விடுகின்றன. மனமானது அமைதியற்று - கிளர்ச்சி நிலையிலிருக்கையில் மனதில் எண்ண அலைகள் அதிகரித்து, சுவாச வேகம் கூடும் அதேவேளையில் இதயத் துடிப்பும் அதிகரிக்கும். இதனால் உடலில் பல்வேறு வேதியல் மாற்றங்களும் கட்டவிழ்கின்றன. அதாவது அதிரீனலின், கோர்டிசோல் முதலிய சுரப்புக்கள் அதிகரிக்கையில் இதயக் கோளாறுகள், நரம்புதளர்ச்சி, சுவாசப் பிரச்சினைகள் ஏற்பட்டு உடலியக்கங்கள் தடைப்பட்டு மாரடைப்பு, பாரிசவாதம், சிறுநீரகக் கோளாறுகள் போன்ற பல்வேறு நோய்களை வரவழைத்து மரணம்கூட சம்பவிக்கும் அபாய நிலையுமுண்டு. அதுமாத்திரமல்லாமல் செரட்டோனின், டோப்பமைன், என்டோபின், ஒக்சிடோசின் போன்ற பலவித உயிர் வேதிப்பொருள்கள் நரம்பியற்கடத்திகளாக உடலில் தொழிற்படுகின்றன. இவை சமிபாடு, நித்திரை, அனுசேபத் தொழிற்பாடுகள், வாழ்வியல் ஊக்கம், சந்தோஷம், சுறுசுறுப்பு, படைப்பாற்றல் முதலிய எண்ணற்ற பணிகளுக்கு முத்தாய்ப்பாக விளங்குகின்றன. இவற்றின் தொழிற்பாடுகளில் பாதிப்புகள் - தடைகள் ஏற்படும்போதுதான் மேற்கூறப்பட்ட பணிகள் - இயக்கங்கள் எல்லாம் தலைகீழாக மாறுவதுடன் உடற்சீரமைப்புத் தொழிற் பாடுகளும் பாதிப்படைகின்றன. இதற்காக மனதினை அமைதியான - சாந்தமான நிலையில் வைத்திருக்கும்போது இவற்றின் தொழிற்பாடுகளனைத்தும் செவ்வனே ஆற்றப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. யோகப்பயிற்சிகள் மூலம் சுவாசத்தை தீர்க்கமானதாக, ஆழமானதாக மாற்றுகின்ற போது எண்ண அலைச்சுழல் குறைவடைந்து

தெளிவான - அமைதியான - சஞ்சலமற்ற மனநிலையை உருவாக்கலாம்.. இங்கு யோகம் என்பதன் விளக்கம், அதன் படிமுறைகள், அவை எவ்விதமாக உடல், உளக் கட்டமைப்பை பேணுகின்றன? என்பதை கீழ்வரும் பத்தி வெளிப்படுத்துகின்றது.

யோகம் என்பது நமது உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்று முக்கிய பொருள்களின் இயக்கப்பாடுகளையும் ஒன்றிணைத்து மனித வாழ்வியற் சமன்பாட்டிற்கு வித்திடும் அறிவியற் கலையாகும். இதனை இன்னொருவிதமாகக் கூறும்போது ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இணைதலுக்கான ஒழுக்க நெறிகளை - வாழ்வியல் ரீதியான விடயங்களைப் போதிக்கும் துறை இதுவாகும். இராஜயோகம் வலியுறுத்துகின்ற விடயப்பரப்பிலுள்ள அட்டாங்கயோகம் என்ற எட்டு வகையான உட்பிரிவுகளுள் இயமம், நியமம் ஆகியவை சாதகனொருவன் தன் வாழ்க்கையில் கைக்கொள்ளவேண்டிய அகப்புற ஒழுக்க விழுமியங்களை ஒழுங்குறக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதுடன் மூன்றாவதாகிய ஆசனங்கள் (நிலைகள்) என்ற பகுதியானது உடற்றொழிற்பாட்டுடன் தொடர்புடைய பல்வேறு உடற்பயிற்சி முறைகள் பற்றி குறிப்பிடுகின்றது. உடலின் உள்ளமைப்பை சீராக ஓம்பிப் பாதுகாக்கின்ற வழிவகைகளை, அதாவது கலங்கள் முதற்கொண்டு அங்கங்கள், இழையங்கள், தொகுதிகள் வரையான உடல் உட்கட்டமைப்பின் சீரான இயங்கியல் தன்மையை உறுதிப்படுத்துகின்ற ஆசன வகைகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. நான்காவதாக, பிராணாயாமம் என்ற பகுதியானது சுவாசப் பயிற்சிகளூடாக, உடலிலுள்ள எல்லா மண்டலங்களுக்கும் தலையாயதாக விளங்குகின்ற சுவாச மண்டலத்தைச் சீராகப் பேணுவதுடன் ஏனைய மண்டலங்களையும் சீராகப் பேணலாம் என்பதை வலியுறுத்துகின்றது. இன்னொரு முக்கிய விடயம் யாதெனில் சுவாசத்திற்கும் மன இயக்கத்திற்கும் நெருக்கமான, நேர்க்கணியத் தொடர்புண்டு. சுவாசம் சீராக இயங்குகையில் மனமும் அமைதியடையும். சுவாச வேகம் கூடும்போது மனமும் கலவரம் அடைந்து பதட்டமடையும். இது தன்னெழுச்சி சார்ந்தது. இயல்பானது. இதிலிருந்து பிராணாயாமப் பயிற்சிகளானவை உடல் இயக்கத்திற்கு மட்டுமன்றி அதனூடாக மன இயக்கப்பாட்டிற்கும் உறுதுணையாக விளங்குகின்றதெனின் மிகையில்லை. அடுத்துவரும் மூன்று கட்டங்களான பிரத்தியாகாரம், தாரணை, தியானம் என்பவை மனம் சார்ந்த - மனதை செம்மைப்படுத்தும் பயிற்சிகளுக்குரியதாகிய நிலைகளாக திகழ்கின்றன. ஆன்மாவின் இறுதி இலட்சியமான சமாதி என்பது ஆன்ம ஈடேற்றமாகிய மீண்டும் பிறவாத நிலையான முக்தி நிலையைக் குறிக்கின்றது.

மேற்கூறிய விடயங்களிலிருந்து மனித வாழ்க்கை பூரணத்துவ நிலையைப் பெறுவதற்கு எவ்விதமான ஒழுக்கவிழுமியப் பண்புகள் பயிற்சி முறைகளையெல்லாம் பூண்டொழுக வேண்டும் என்று விளக்கப்பட்டுள்ள அட்டாங்க யோகப்படி முறைகளுள் இறுதி நிலையாகிய சமாதி நிலையை எய்துவதற்கு உடல் அப்பியாசங்களை விடக் கடினமான மனப் பயிற்சிகளே அதிக ஆதிக்கம் செலுத்துவதனை உணர முடியும். கடினமான மனப்பயிற்சிகள் மூலம் மனதினை ஒருவன் சரியாக கையாழும் திறனைப்பெறின் ஈற்றில் மனதின் இயக்கம் நின்று எண்ணச் சுழலானது பூச்சிய - சூன்ய நிலையை அடையும்போது அவனுக்கு இந்தப் பிரபஞ்சமே வசப்பட்டு அட்டமா சித்திகளும் கைவரப்பெற்ற ஞானியாவான் என்று யோக நூல்கள் சுட்டியுரைக்கின்றன. மேலும், சமகால வாழ்க்கையில் மனிதன் நோயில்லாது சந்தோஷமாக நீண்ட ஆயுளுடன் வாழ்வதென்பதே கானல் நீராகி வருகின்றது. இயற்கையைப் புறந்தள்ளி அதனை அழித்து வாழ முற்படாது, அதனோடிணைந்து - புரிந்து, பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த, முக்காலமும் அறிந்த சித்தர்கள், யோகிகளான நம் முன்னோர்கள் காட்டிய முறையான பாதையில் - யோக நெறியில் நமது வாழ்வியலைக் கட்டமைக்கத் தலைப்பட்டால் உடல், உளச் சமநிலை பேணப்பட்டு ஆயுளுள்ளவரை ஆரோக்கியமாக வாழலாம் என்ற நிதர்சனத்தை நாம் அனைவரும் மனங்கொண்டு செயற்பட முயல்வோம்.

> **“உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
> **உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே” - திருமந்திரம்**

# ஞானத்தாழிசை

## மறைக்கப்பட்ட மறக்கடிக்கப்பட்ட
## மாணிக்கவாசக சுவாமிகளின் பாடல்

வாகீசன்

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

ஔவையார் தனது நல்வழிப் பாடலொன்றின் மூலம் திருவாசகத்தின் சிறப்பினை திருமந்திரம், திருக்குறள் ஈறாக மற்றைய வேத நூல்களுடன் ஒப்பிட்டு பெருமை சேர்ப்பிக்கின்றார்.

திருவாசகத்தினை அறியாதோர் நம்மில் பெரும்பாலும் யாரும் இருக்க மாட்டார்கள். நமது வாழ்வில் இரண்டறக் கலந்து விட்ட சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம் ஆகிய பதிகங்கள் அடங்கிய மாணிக்கவாசக சுவாமிகளால் அருளப்பட்ட திருவாசகம் ஆனது பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக வகைப்படுத்தப் பட்டுள்ளது. இது சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் வரை 51 பதிகங்கள் அடங்கிய 658 பாடல்களைக் கொண்டுள்ளது. இன்று இந்த 51 பதிகங்கள் அடங்கிய இந்த 658 பாடல்களும் பரவலாக அனைத்து சாமானிய மக்களிடமும் போய்ச் சேர்ந்துள்ளன. எமது ஆலயங்களில் பூசை வழிபாடுகளில் ஓதப்படுகின்றன. திரு விழக்காலங்களில் ஒலிக்க விடப்படுகின்றன. எம்மைப் போன்ற சாதாரண மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் பல்வேறு புலவர்களினாலும் அறிஞர்களினாலும் அதற்குரிய விளக்கவுரைகளும் எழுதப்பட்டு அச்சு நூல்களாக எமக்கு இலகுவாகக் கிடைக்கின்றன. இளம்பிராயத்தினரும் அறிந்து கொள்ளும் வகையில் பல்வேறு நாடுகளிலும் திருவாசகம் பள்ளிக்கூடங்களின் பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றது.

ஆனால் இங்கு எமக்கு அதிர்ச்சி தரும் ஒரு விடயமாக அமைந்திருப்பது மாணிக்கவாசக சுவாமிகள் 51 பதிகங்களுக்கும் அப்பால் 52 வது பதிகமாக "ஞானத்தாழிசை" என்னும் ஒரு பதிகத்தினைப் பாடியிருகின்றார் என்கின்ற தகவல்தான். அத்துடன் அந்நூலானது திரு முறைகளுக்குள் அடக்கப்படவில்லை என்கின்ற தகவல் இன்னுமின்னும் ஆச்சரியத்தினை ஏற்படுத்துகின்றது. சாதாரண மக்கள் மாத்திரமன்றி, சைவ அறிஞர்கள் கூட அதைப் பெரும்பாலும் அறிந்திருக்கவில்லை; அதற்கு விளக்கவுரைகள் பெரும்பாலும் எழுதப்படவில்லை; ஆலயங்களில் அவை ஓதப்படுவதுமில்லை என்ற தகவல்களும் கூடவே வருகின்றன. இது திட்டமிட்ட வகையில் ஒரு சாராரால் இருட்டடிப்புச் செய்யப் படுவதாகவும் எமது பக்தி நெறியினை அடுத்த தளத்திற்கு நகர்த்த முற்படச் சித்தமில்லாத வெறும் சடங்கு சம்பிராதங்களுக்குள் மட்டுமே எமது சைவ சமயத்தினை புதைக்க முற்படுவோர் இந்நூலிற்கு எதிரான வாதங்களை முன் வைப்பதாகவும் இந்நூலினை ஆதரிப்போர் வைக்கும் குற்றச்சாட்டு.

ஞானத்தாழிசை பாடல்களானது பரவலாக அறியப்படாவிட்டாலும் ஒரு சில நூல்கள் இன்னமும் எம்மிடையே உலா வருகின்றன. இதில் 1927 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்பாதுரை முதலியார் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட நூலினை முக்கியமாகக் குறிப்பிடலாம். இதற்கு

குற்றாலம் சங்கராஸ்ரமம் சுவாமி சங்கரானந்தா அவர்கள் எழுதிய விளக்கவுரையினை முக்கியமான உரையாகக் கருதலாம்.
அப்படி விவாதத்திற்குரிய வகையிலும் விலக்கி வைக்கப்படும் வகையிலும் அந்தப் பாடல்களில் என்னதான் அடங்கியிருக்கின்றது?

ஞானத்தாழிசையின் முதலாவது பாடல் இப்படி ஆரம்பமாகின்றது.

”சுழியாகிய முனைகண்டபின் உற்றாருற வற்றாய்
சூதும்பல பொய்பேசிய தொழிலும் பிறர்க்கிட்டாய்
வழியாகிய துறைகண்ட பின் அநுட்டானமு மற்றாய்
வழங்கும்பல நூல்கற்றிடு நினைவும் பிறர்க்கிட்டாய்
விழியாகிய மலர்கண்டபின் உயரர்ச்சனை யற்றாய்
மெய்ந்நீறிடு திருமந்திரம் விட்டாய் சிவமுற்றாய்
அழியாப்பதி குடியேறினை அச்சம்பல வற்றாய்
யாரொப்பவர் நிலையுற்றவர் அலைவற்றிரு மனமே”

இதற்கு விளக்கவுரையினை சங்கராஸ்ரமம் சுவாமி சங்கரானந்தா பின்வருமாறு முன் வைக்கிறார். ”சுழுமுனையாகிய இதயத்தில் புலன்களும் மனதும் முற்றும் அடங்கினால் எல்லா உறவுகளும் அற்று, சூதுவாது, பொய் போன்ற செய்கைகள் தாமே விலகி விடுகின்றன. சுழுமுனையில் மலரும் சந்திரப்பூவைக் கண்டபின் இவ்வுலகத்து மலர்களும் அர்ச்சனையும் பொருளற்றதாகி விடுகின்றன. உண்மை நெறி கண்டபின் பல சாத்திரங்கள் கற்பதும் அநுஷ்டானங்கள் செய்வதும் பல மந்திரங்கள் செபிப்பதும் விட்டு ஜெபத்தில் மனம் லயித்துத் தானே சிவமாய் விளங்குகிறான்” ஞானநெறியில் தனது பக்தி மார்க்கத்தினை அமைத்துக்கொண்ட மாணிக்கவாசகர் தான் ஏற்கனவே எழுதிய பாடல்களை விட, ஞானத்தாழிசையில் இன்னும் ஒரு படி மேல் போய் விடுகின்றார். இந்த ஞான நிலையை அடைந்து விட்ட பின் எமக்கு எதற்கு மந்திரம், எதற்கு அர்ச்சனை, அநுட்டானங்கள் என்ற கேள்வியினை முன் வைக்கின்றார்.

இரண்டாவது பாடலில் அவர்,

”நெஞ்சிற்பொரு ளடிகண்டபின் நெஞ்சிற்பகை யற்றாய்
நேசத்தொடு பார்மங்கையர் மேலும்நினை வற்றாய்
மிஞ்சிச்சொலு முரையாண்மையும் வீம்பும்இடும் பற்றாய்
விரதங்களும் வேதங்களும் வீணாகம றந்தாய்
அஞ்சும்உட லாய்க்கண்டபின் ஆசைத்தொடர் பற்றாய்
ஆருந்திருக் கோயில்சிவம் அதுவும்தனில் உற்றாய்
தஞ்சம்எனும் ஞானக்கடல் மூழ்குந்திற மாகித்
தாள்சேர்ந்தனை குறைவேதினி சலியாதிரு மனமே”

இதனைப் புரிந்து கொள்ள புதிதாக விளக்கவுரைகள் தேவையில்லை.

”தன் இதயமாகின்ற புருவ மையத்தில் பரம்பொருளை அநுபவித்தபின் பகையில்லை. காம ஆசையில்லை. ஆணவமும் வீம்பும் கருகி விடுகின்றன. வாயால் சொல்லிக் கையால், தலையால், வணங்குகின்ற மந்திரங்களும் வேத பாராயணங்களும், சடங்குகளும் வீண் எனும் தெளி வேற்படுகிறது. ஞானசாகரத்தில் மூழ்கி இறைவனுடன் இரண்டறக் கலந்து நிற்கும் அம்மனத்திற்கு ஏது சலிப்பு?”

மீண்டும் மாணிக்கவாசகர் தனது ஞான மார்க்கத்தில் வேத மந்திரங்கள், பாராயணங்கள், சடங்குகள் அனைத்துமே வீண் என்ற தொனியில் பேசுகின்றார்.

இப்படி இந்தப் பாடல்கள் நெஞ்சை உருக்கும் வகையில் பாடப்பட்ட போதும் இவற்றை நிராகரிப்போர் கூறும் கருத்துக்கள் என்ன?

அதற்கு அவர்கள் பல்வேறு காரணங்களை முன் வைக்கிறார்கள். முதலில் அவர்கள் வைக்கும் காரணம் இவை திருமுறைகளுக்குள் அடங்கவில்லை என்பதாகும். அத்துடன் இதனை மாணிக்கவாசகர் எழுதியதென்பதற்கு உறுதியான சான்றுகள் இல்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

மேலும் இவர்கள் சில இலக்கிய அறிஞர்கள்களின் துணை கொண்டு இந்த மொழிநடை, செய்யுள் அமைப்பு, அதற்குரிய காலச்சூழலினைக் கருத்தில் கொண்டும் இவை மாணிக்கவாசகர் காலத்திற்குப் பிந்தையதாக இருக்கலாம் எனக் கூறுகிறார்கள். கூடவே "ஞானத்தாழிசை"யில் காணப்படும் பல கருத்துகள் சித்தர் இலக்கியங்களோடு நெருக்கமாக இருப்பதால் இது பிற்கால சைவ ஞான மரபில் உருவானதாக இருப்பதற்குச் சந்தர்ப்பங்கள் இருப்பதாகவும் அவர்கள் வாதங்களை முன் வைக்கிறார்கள்.

ஆனால் இவை மட்டுமே இதனை நிராகரிப்பதற்கான காரணங்களாக முன் வைக்கலாமே என்பதுவும் இங்கு எமது கேள்வியாகின்றது. இவை வள்ளலாரின் அருட்பாக்களை மருட்பாக்கள் என ஒரேயடியாக நிராகரித்த ஆறுமுகநாவலரின் வாதத்தினை போல் இருக்கின்றன. இன்று சங்கப்பாடல்கள் என்ற வகைக்குள் அடங்கும் "தொல் தமிழ்ப் பாடல்கள்" இற்கு இடையே மிகவும் பிந்தைய காலகட்டப் பாடல்களாகிய பரிபாடலும் திருமுருகாற்றுப்படையும் இடைச் செருகப்பட்டிருக்கின்றன. எமது முப்பாட்டன்களாகிய தொல்காப்பியனும் வள்ளுவனும் வளர்த்த தமிழிற்குள் அகத்தியன் எனும் ஒரு குறுமுனியின் கற்பனைப் பாத்திரம் உட்செருகப்பட்டு எம் கண்முன் இல்லாத அகத்தியம் எனும் ஒரு நூல் இருந்ததாக உருட்டுக்களும் புரட்டுக்களும் எமது முன் வைக்கப்படுகின்றன. எத்தனையோ அறிஞர்களும் ஆய்வாளர்களும் இதனைச் சுட்டிக் காட்டியும் இத்தவறினைத் திருத்தும் மனப்பக்குவம் எம்மிடையே இன்னமும் வாய்க்கப்படவில்லை. இந்நிலையில் "ஞானத்தாழிசை" நூலினை மட்டும் எம்மவர்கள் நிராகரிப்பதற்கான காரணங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

எமது சைவநெறி ஆனது பன்முகத்தன்மை கொண்டு பல்வேறு கிளைப் பரப்புக்களையும் கொண்டு தளைத்து வளர்ந்து நிற்கும் ஒரு நெறியாகும். இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு, சிறு தெய்வ வழிபாட்டிலிருந்து பெருந் தெய்வ வழிபாடாக மாறியது மட்டுமன்றி , உருவ வழிபாட்டிலிருந்து ஒளி வடிவில் இறைவனைக் காணும் அற்புத தத்துவங்களை கொண்டுள்ளது. அதற்கு மேலால் "தெள்ளத் தெளிர்தார்க்கு சீவன் சிவலிங்கம்" எனும் அதி உச்ச ஆன்மிக நிலையை வலியுறுத்துவது எமது சமயநெறி. எனவே நாமும் எமது சமய ஆசார அநுட்டானங்களைக் கடைப் பிடிப்பதோடு நின்று விடாது அதனை மிகவும் சீர்திருத்தம் செய்யப்பட்ட ஒரு முறையில் எமது அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டிய ஒரு பாரிய பொறுப்பு எம்மிடையே உண்டு. அதனைச் செய்வதற்கான அடிக்கல்லினை நாம் இன்றே நிலை நாட்ட வேண்டும்.

# செவ்வாய்

## செவ்வாய்க் கிரகத்திற்கு அபயம் கொடுத்த வைத்தீஸ்வரன் கோயில்

பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

செவ்வாய்க்கு அங்காரகன், பூமிகாரன், அசுபமங்களகாரகன், போர்க்கடவுள், செம்மீன் என்ற பெயர்களும் உண்டு. செவ்வாய் சிவப்பு நிறமாக இருக்கும்.. செவ்வாய் சிவப்பு வண்ண ஆடை அணிவதால் செவ்வாய் எனப் பெயர் பெற்றது. நவக்கிரக நாயகரில் சூரியன், சந்திரன், ஆகியோருக்குப் பின்னர் மூன்றாவது நிலையில் இருக்கும் கிரகம் இதுவாகும். பூமிக்கு அருகில் இருக்கும் செவ்வாய் (Mars) நவக்கிரக அமைப்பில் சூரியனுக்குத் தெற்கில் இருக்கும் கிரகமாகும்.

செவ்வாயை பித்ருகாரகன், பூமிகாரகன், சகோதரகாரகன், கடூரமான கிரகம் எனவும் குறிப்பிடுவர். மேலும், ஆண்தன்மை, சுறுசுறுப்பு, தைரியம், வீரியம், நான் என்ற தன்மை உடைய கிரகம். இராணுவத்தில் இருப்பவர்கள், காவல் துறையினர், போர்வீரர்கள் யாவரும் செவ்வாய் ஆதிக்கம் பெற்றவர்களாக இருக்கலாம்.

"ஆடிச் செவ்வாய் தேடிப் பிடித்தால்
நாடிய கணவன் வீடு வருவான்."

என்று சொல்வதுண்டு.

செவ்வாய்க்குற்றம் உள்ள பெண்கள் ஏழு செவ்வாய்க்கிழமைகளும் விரதம் பிடித்தால் திருமணம் சுபமாகும் என்பதே இதன் கருத்தாகும்.

சோதிடத்தில், பிறந்த இலக்கினத்திலிருந்து 2,4,7,8,12 ஆம் இடத்தில் செவ்வாய் இருந்தால் அது தோஷமாகக் கருதப்படுகிறது. ஒரு இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கும் காலம் ஒன்றரை மாதம். குழந்தை பிறந்த உடனேயே சாதகம் எழுதும் வழக்கமுள்ள குடும்பங்களில் ஒரு சோதிடரை அணுகிச் சாதகம் கணிப்பார்கள். அப்படிப் பார்க்கும்போது செவ்வாய் எந்த இராசியில் உள்ளது என்று துல்லியமாகப் பார்க்கப்படும். மேலே குறிப்பிட்ட இராசிகளில் இருந்தால் அது தோஷமாகக் கருதப்படும். செவ்வாய்க்குற்றம் இருக்குதோ? என்று பெற்றோர் ஆவலாக வினவுவர். அதனால் செவ்வாய் தோஷமுள்ள ஒரு மணமகனுக்கோ மணமகளுக்கோ அந்தத் தோஷத்துடன் சேரக்கூடிய ஒருவரைத்தான் பார்த்துத் திருமணம் செய்துவைப்பார்கள். இது இன்றும் சில குடும்பங்களில் நடைபெறுவதைப் பார்க்கலாம்.

திருமாலின் (விஷ்ணுவின்) ஒன்பது அவதாரங்களில் நரசிம்மன் செவ்வாய் அவதாரம் ஆகும். செவ்வாய்க்கிரகம் சூரியன், சந்திரன், வியாழன் ஆகிய கிரகங்களுக்கு நண்பன். மேடம், விருச்சிகம் ராசிகளுக்கு உரியவர் செவ்வாய்.

செவ்வாய்க்குற்றம், திருமணத்தடை, இரத்த சம்பந்த வியாதிகள், பித்த நோய், தொழு நோய் யாவைக்கும் பரிகாரகன் செவ்வாய்க் கிரகமாகும்.

செவ்வாய் குள்ளமாக இருப்பார். அவரின் ஏனைய விவரங்களைப் பார்க்கலாம்.

சிவப்பு வாய், நான்கு கைகள், வலது கையிற் கதை ஆயுதம், இடது கையில் சக்தி ஆயுதம், கீழ் வலதுகையில் சூலாயுதம், கீழ் இடதுகை வரதகரம்.
சிவப்பு உருவம், அணிவது சிவப்பு ஆடை, சிவப்பு மலர்மாலை.
வாகனம் - ஆடு, அன்னம்.
குணம் - கொடூரம், உலோகம் - செம்பு, தானியம் - துவரை, மலர் - செண்பகம், சமித்து - கருங்காலி, சுவை - துவர்ப்பு, அதிதேவதை - முருகன்

தரிசனம்
வைத்தீஸ்வரன் ஆலயத்திலுள்ள சித்தாமிர்த தீர்த்தத்தில் நீராட வேண்டும். செவ்வாய்க்கிழமை களில் செல்வது விசேடம். சகல நோய்களையும் தீர்க்கும். நீராடிவிட்டு வேறு உடை அணிதல் வேண்டும். இவைதான் முறையாகும். நாங்கள் தலையில் தீர்த்தத்தை எடுத்துப் புரோட்ஷணம் செய்தோம். பின்னர் படிகள் மூலம் தரையை அடைந்து விபூதி எடுத்து முருகனையும், செவ்வா யையும் நினைத்து அணிந்தோம். அருகில் ஒரு கடை இருந்தது. நாங்கள் செவ்வாய்க்கிரகத்தை வழிபடச் செல்கிறோம் என்று கடைக்காரருக்குச் சொன்னவுடன், செவ்வாய்க்கேற்ற அபிடேகப் பொருள்களையும், தீபங்களையும் தந்தார், பெற்றோம்.

வைத்திய நாதரைப் பார்த்துவிட்டுச் செல்வோம் என நினைத்து அங்கு சென்றோம். ஒரே மக்கள் கூட்டமாக இருந்ததால். அணுகவே முடியாமல் இருந்தது. பின்னர் போகும் வழியைக் கேட்டுத் தெரிந்துகொண்டு செவ்வாயின் சந்நிதியை அடைந்தோம். செவ்வாய்க்கிரகம் ஒருபுறத்தே தனிக்கோயில் கொண்டு இருக்கிறது. இங்கு கூட்டமில்லை. மனைவியாரும் நாமும் தான் வழிபடுவோராக இருந்தோம். சிவாசாரியார் மிக அன்புடனும், ஆதரவாகவும் எமை ஆதரித்து அர்ச்சனை செய்தார். செவ்வாய் நின்ற நிலையில் சிவப்பு ஆடை, மலர்மாலையுடன் காட்சியளித்தார். அர்ச்சனை முடிந்தவுடன், பக்கத்தில் நின்ற யானையிடம் தேங்காயைக் கொடுத்தோம். அது கும்பிட்டு எடுத்து வாழ்த்தியது. இது தற்போதும் எனது மனக்கண்ணில் நினைக்கும் போது பசுமரத்தாணிபோன்று தோன்றுகிறது. செவ்வாய்க்கிரகத்தையே பார்த்தபடி அங்கே நின்றிருந்தோம்.

அவ்வமயம் ஒரு தம்பதி எமை அணுகி, எமக்கு ஒரு சுமங்கலிப் பெண் எங்கள் விழாவில் பங்குபற்றத் தேவை எனக் கோரினர். நாம் இணைந்தோம். நாங்கள் நால்வர் தான். செவ்வாய்க்கு அபிடேகம், அலங்காரம், தூப தீப ஆராதனைகள் யாவும் முறையாக நடந்தன. நன்றாகவே கலந்து வழிபட்டு ஆனந்தப்பட்டோம்.
பின்னர் செவ்வாய் உற்சவ மூர்த்தியாக ஆடு வாகனத்தில் ஏறி கோயிலைச் சுற்றி வந்தார். நாங்களும் சேர்ந்து சென்றோம்.
கும்பிடப்போன தெய்வம். குறுக்கே வந்ததுபோல...:

வைத்தீஸ்வரன் கோயிலில் உள்ள முருகனின் பெயர் முத்துக்குமாரசுவாமி ஆகும். அர்த்தசாமப் பூசையின் போது முதலில் முத்துக்குமார சுவாமிக்கு வழிபாடு செய்த பின்னர் தான் இந்நிகழ்ச்சி ஆரம்பிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. வைத்தீஸ்வரன் கோயிலைப் பற்றி சம்பந்தர், அப்பர், அருணகிரிநாதர், மேலும் பலர் பாக்கள் பாடியுள்ளனர்.

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவில்லா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு.

# ‘சிவபெருமானின் தாய்’

செல்வி வாரணி சுபாஸ்கரன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி



சோழ நாட்டிலே காரைக்கால் எனும் பட்டினத்திலே தனதத்தன் எனும் வணிகனுக்கு காரைக்கால் அம்மையார் புனிதவதி எனும் இயற்பெயருடன் பிறந்தார். இவர் சிறுவயதில் இருந்தே சிவ பக்தையாக சிவனின் மீது அளவு கடந்த அன்பும், பாசமும் கொண்டு நாள்தோறும் பூசித்து வந்தார். புனிதவதி திருமணப் பருவத்தை அடைந்ததும் பரமதத்தன் எனும் வணிகனுடன் திருமணம் செய்து கொண்டார்.

அவர்களுடைய இல்லற வாழ்க்கை மகிழ்ச்சியாக இருந்த போதிலும் அவர் சிவ வழிபாட்டைக் கைவிடவில்லை. ஒருநாள் பரமதத்தனுக்கு அவருடைய உறவினர் ஒருவர் கடையில் வைத்து இரண்டு மாம்பழங்களைக் கொடுத்தார். அதை வாங்கிய பரமதத்தன் தனது வேலையாளிடம் கொடுத்து இதைத் தங்கள் வீட்டில் புனிதவதியிடம் கொடுக்கச் சொன்னார். அதை வாங்கிய புனிதவதி தனது கணவனுக்காக சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.
அந்த நேரம் பார்த்து அவருடைய வீட்டிற்கு ஒரு சிவனடியார் வந்தார். அவரை வணங்கிய புனிதவதி தகுந்த மரியாதையுடன் அழைத்து அவருக்கு வேண்டியதைச் செய்தார். அடியவர் புனிதவதியிடம் உணவு கேட்டார். ஆனால், அந்த நேரம் சோறு மட்டுமே சமைக்கப்பட்டிருந்தது. செய்வதறியாது திகைத்த புனிதவதி சோற்றையும் கணவன் கொடுத்தனுப்பிய மாம்பழத்தில் ஒன்றையும் பரிமாறினார். சிவனடியாரும் மனநிறைவோடு உணவு உண்டு ஆசி வழங்கிச் சென்றார்.

மதிய நேரம் பரமதத்தன் வீட்டிற்கு வந்தான். புனிதவதி உணவு பரிமாறினாள். அதை உண்டு முடித்த பரமதத்தன் தான் கொடுத்தனுப்பிய மாம்பழத்தில் ஒன்றைக் கொண்டுவரச் சொன்னார். புனிதவதியும் கொடுத்தாள். அதை உண்ட பரமதத்தனுக்கு மிகவும் சுவையாக இருந்ததனால், மற்றைய மாம்பழத்தையும் கேட்டான். செய்வதறியாது திகைத்த புனிதவதி சமையலறைக்குள் சென்று சிவனை வேண்டினார். திடீரென்று அவர் கையில் மாம்பழம் தோன்றியது. அதைக் கொண்டு சென்று கொடுத்தார் புனிதவதி. பரமதத்தன் அதை உண்ட போது மேலும் சுவையாக இருந்தது. அதனால் சந்தேகமுற்ற பரமதத்தன் இது எங்கிருந்து வந்தது? என வினவ, புனிதவதி உண்மையைச் சொன்னார். அதை நம்பாத பரமதத்தன் எங்கே இன்னுமொரு மாம்பழம் கொண்டுவா பார்ப்போம் என்று புனிதவதியிடம் சொன்னான்.

மறுபடியும் சமையலறை சென்ற புனிதவதி இறைவனிடம் வேண்ட மாம்பழம் கிடைத்தது. அதைக் கொண்டு வந்து கணவனிடம் கொடுக்கும் போது அது மறைந்தது. அதைக்கண்ட பரமதத்தன் தெய்வப் பெண்ணாக புனிதவதியை எண்ணிப் பயந்தான்.

மறுநாளே தனக்கு வேறொரு ஊரில் வணிக வேலை இருப்பதாகவும் வருவதற்குப் பலநாள்கள் எடுக்குமென்று கூறிவிட்டுச் சென்றான். அவ்வாறு சென்ற பரமதத்தன் வணிகத்தை முடித்துவிட்டுக் காரைக்காலுக்குத் திரும்பாமல் வேறொரு ஊரில் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து

இரண்டு குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான். ஆனால், இங்கே புனிதவதி தனது கணவனுக்காகக் காத்திருப்பதும் சிவ பூஜையைச் செய்வதுமாக இருந்தார். ஒருநாள் புனித வதியின் உறவினர் ஒருவர் அயலூருக்குச் செல்லும் போது அங்கு பரமதத்தன் தனது மனைவி குழந்தைகளுடன் சந்தோசமாக இருந்ததைக் கண்டு ஊருக்கு வந்து புனிதவதியாரிடம் சொனார். ஆதைப் புனிதவதி நம்பாமல் மறுத்துவிட்டாள். அப்போது அந்த உறவினர், தான் சொன்னால் நம்பமாட்டாள். பார்த்தால் தான் நம்புவாள் என நினைத்து சிலருடன் சேர்த்து அனுப்பி வைத்தார். அவளும் மனதில் பதற்றத்துடன் சென்று கொண்டிருந்தாள்.

புனிதவதி தன்னைத் தேடி வருவதை அறிந்த பரமதத்தன் தன் மனைவி பிள்ளைகளுடன் ஓடி வந்து வரும் வழியிலேயே புனிதவதியின் கால்களில் விழுந்தார். இதைக்கண்டு திகைத்த புனிதவதி கணவனே தன்னை வெறுத்தபோது தனக்கு இந்த அழகும் உடலும் எதற்கு? எனக்கு எலும்பும் தோலுமான சரீரம் வேண்டும் என சிவனிடம் வேண்டினார். அவர் வேண்டியவாறே எலும்பும் தோலுமான சரீரம் கிடைத்தது. இதைக்கண்டு அவருடன் கூடிவந்தவர்களும் பரமதத்தன் குடும்பமும் அங்கிருந்து ஓடினர்.

இதன் பிறகு இவர் பலதலங்களைத் தரிசித்து வந்தார். சிவனை நோக்கும் காரணத்துடன் கைலை நோக்கிப் புறப்பட்டார். மலையடிவரைக்கும் நடந்து சென்ற அவர் சிவன் இருக்கும் இடத்தில் காலால் மிதிப்பது தவறு என நினைத்து தலைகீழாக நடந்தார். தலைகீழாக நடந்து வந்த காரைக்கால் அம்மையாரைப் பார்த்து சிவன் “அம்மையே!” என அழைத்தார். சிவனால் “அம்மையே” என அழைக்கப்பட்டதால் இவரது புனிதவதி எனும் பெயர் மாறி அவருடைய ஊரான காரைக்காலைச் சேர்த்து “காரைக்கால் அம்மையார்” என அறியப்பட்டார்.

அவர் சிவனிடம் தங்களுடைய ஆடற் கோலத்தைக் காண வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதற்கு, சிவன் திருவாலங்காட்டுக்குச் செல்லும் படியாகவும் அங்கு அக்கோலத்தைக் கண்டு களிக்குமாறு கூறினார். இதனால் அக்கோயிலுக்குச் சென்று சிவபெருமானின் ஆடற்கோலத்தைக் கண்டு களித்தார்.

காரைக்கலம்மையார் அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் எனும் பல பிரபந்தங்களை இயற்றியுள்ளார். தற்காலத்திலும் கோயில் சிற்பங்களில் சிவன் ஆடற்கோலத்தில் இருக்கும் போது 63 நாயன்மார்களும் நின்றவாறே பார்ப்பார். ஆனால், அம்மையார் மட்டும் உட்கார்ந்திருந்தே பார்ப்பார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

\- காரைக்கால் அம்மையார் புராணம்
பாடல் எண் 60
சேக்கிழார்

# திரு க சிவகுருநாதபிள்ளை அவர்கள்

(சைவமும் தமிழும் ஒன்றான ஓர் உயிர்)



சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரும், முன்னாள் பரீட்சைச் செயலாளரும், தமிழ்மொழி - தமிழ்ப்பண்பாட்டின் மீது ஆழ்ந்த பற்றும் அர்ப்பணிப்பும் கொண்டவருமான சிவாப்பிள்ளை என்று எம்மால் அன்புடன் குறிப்பிடப்படும் அமரர் சிவகுருநாதபிள்ளை அவர்கள் நவம்பர் 24, 2025 அன்று இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி எமது சங்கத்தினரிடையே ஆழ்ந்த வருத்தத்தையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவர் 1980-இல் இருந்து இலண்டன் பல்கலைக்கழகத்தின் 'கோல்ட்ஸ்மித்' கல்லூரியில் (Goldsmiths College, University of London) பேராசிரியராகப் பணியாற்றி அங்கு கல்வியியல் துறையின் இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்மொழியின் செம்மையும் சைவ நெறியின் மேன்மையும் சமூகத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் அவர் ஆற்றிய பணிகள் என்றும் நினைவுகூரத்தக்கவை. அவர் தனது இறுதி மூச்சு வரை தமிழிற்காக பணியாற்றினார் என்பது, அவர் கம்போடியாவில் நடைபெற்ற "கடாரம் கொண்டான் இராசேந்திர சோழன்" மாநாட்டிற்குக் கலந்து கொள்ளச் சென்றிருந்த வேளையில் தான் காலமானார் என்பதன் மூலம் நிரூபணமாகின்றது. சிவகுருநாதபிள்ளையின் தமிழ்க் கல்விப் பணியைப் பாராட்டி லண்டனில் இவருக்கு "EAL" விருது வழங்கப்பட்டதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

தமிழுக்கும் சைவத்திற்கும் அவர் ஆற்றிய சேவை என்றும் வாழும். அவரது மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமசுந்தரி அம்பாள் உடனாய சிதம்பரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திப்பதுடன் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் "கலசம்" இதழ் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி சுதர்சினி
கலசம் ஆசிரியர் குழு





5 Star
FOOD HYGIENE RATING
5
VERY GOOD
HALAL
Royal thali .co.uk
AUTHENTIC INDIAN CUISINE
Royal Thali Restaurant
Taste of Tradition
deliveroo
JUST EAT
Uber Eats
Opening Hours
Mon-Sun: 10 AM - 10 PM
Email:
customercare@royalthali.co.uk
Google
100 HIGH STREET, BARKINGSIDE, IG62DR
020 3500 8100
075 9810 0100



உ

சிவயோகம்

SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)



இந்து கலாசார மையம்

அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881









சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் “சிவயோகம்” அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS

நன்றி

ஆலய நிர்வாகத்தினர்

Muththumari Amman Temple Sivayogam



**"Ammanai Saran Addainthal Athika Varam Peralam"**

## SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

## அம்பிகையின் திருவருளை பெற

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்கு

# அன்னதானம் செய்ய அரிய வாய்ப்பு




உங்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின்
பிறந்தநாள், திருமணநாள், நினைவு நாள் மற்றும்
உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

## அன்னதானம் செய்யலாம்...

உங்களின் £100 பங்களிப்பு
பல பேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்....
இப்புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு
உதவுவதற்கு தயாராக இருக்கின்றோம்.
(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு தின
புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

**YOU CAN CONTRIBUTE FOOD**

**DONATION £100** NO ADMINISTRATION CHARGES

**to Orphanages or Elders Home in Sri Lanka**

on Your Birthday, Wedding Day
Remembrance Day
or Any Other Special Function




**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 06905358**

## அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்

**Please donate as much as you can!**


SURYA JEWELLS
"உண்மை வெல்லும்"
நியாயமான வட்டி வீதத்தில்
தங்க நகைகள் அடகு பிடிக்கப்படும்
விதவிதமாய் வித்தியாசமான டிசைன்கள்
உங்கள் அழகிற்கு அழகூட்டிடும்
பழைய பவுண்களைக் கொடுத்து
புதிய நகைகளை வாங்கலாம்
அதுமட்டுமல்ல
நீங்கள் செய்யும் ஆடர்கள்
குறித்த நேரத்தில்
செய்து தருவதில் வல்லுநர்கள்
அதி குறைந்த வட்டி வீதத்தில்
வாரத்தில் 7 நாட்களும்
அடகு பிடிக்கப்படும். (2.5%)
மலிவான விலையில்
தரமான தங்கத்திற்கு
Eastham ல்
சூரியா ஜீவல்ஸ்
உங்கள் நகைகளை வேறு இடத்தில் கூடிய வட்டி வீதத்தில் அடகு வைத்திருந்தால்
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
Tel: 020 8552 2224
292 High Street North, London E12 6SA

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### ஜனவரி (14-01-2026) தொடக்கம் ஏப்பிரல் (14-07-2026) வரை

| | | |
|---|---|---|
| 15.01.2026 | வியாழன் | பிரதோஷம் |
| 18.01.2026 | ஞாயிறு | அபிராமிப் பட்டர் விழா |
| 24.01.2026 | சனி | ஆண்டு அபிஷேகம் |
| 30.01.2026 | வெள்ளி | பிரதோஷம் |
| 01.02.2026 | ஞாயிறு | தைப்பூசம் |
| 14.02.2026 | சனி | பிரதோஷம் |
| 15.02.2026 | திங்கள் | மகாசிவராத்திரி |
| 28.02.2026 | சனி | பிரதோஷம் |
| 02.03.2026 | திங்கள் | நடேசரபிஷேகம் |
| 16.03.2025 | திங்கள் | பிரதோஷம் |
| 19.03.2026 | வியாழன் | வசந்த நவராத்திரி ஆரம்பம் |
| 28.03.2026 | சனி | நவராத்திரி பூர்த்தி, யோகசுவாமி குருபூசை |
| 30.03.2026 | திங்கள் | பிரதோஷம் |
| 01.04.2026 | புதன் | பங்குனி உத்தரம் |
| 04.04.2026 | சனி | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| 14.04.2026 | செவ்வாய் | பராபவ வருடப் பிறப்பு |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | |
| Post code | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |



# Thirukkural Stories
# திருக்குறட் கதைகள்

சாவித்திரி ஆனந்தன்

## செய்ந்நன்றியறிதல்
## Gratitude

அதிகாரம்: 11 குறள்: 107
Chapter: 11 Kural: 107

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

பொருள்: தம்முடைய துன்பத்தைப்போக்கி உதவியவரின் நட்பைப் பல்வேறு வகையான பிறவியிலும் மறக்காமல் போற்றுவர் பெரியோர்.

Meaning: The memory of those who help heal grief and pain shall be cherished for ever in gratitude.

பகவான் கிருஷ்ணரைத் தரிசிக்கும் போது மட்டுமல்ல, அவரை நினைத்துக் கொண்டாலும் கூட, நம் எண்ணங்களில் தெரிவது அவருடைய கையில் இருக்கும் புல்லாங்குழலும் அவரது சிரசை அலங்கரிக்கும் அழகிய மயில் இறகும் தான். அவ்வாறு தன் சிரசை அலங்கரிப்பதற்கு பகவான் கிருஷ்ணர் மயிலிறகைக் குறிப்பாக ஏன் தெரிவு செய்தார் என்பதற்கு ஒரு காரணமும் நெகிழ்ச்சி மிக்க ஒரு சம்பவமும் பின்னணியில் உண்டு.

திரேதா யுகத்தில் ராமரும் சீதாப்பிராட்டியும் காட்டில் இருந்தபோது, ஒரு சமயம் அவர்களுக்கு மிகவும் தாகம் ஏற்பட்டது. தாகம் பொறுக்க முடியாத நிலையில் சீதை இராமரிடம்,"எனக்குத் தண்ணீர் வேண்டும் சுவாமி. எங்கேயாவது தண்ணீர் கிடைக்குமா தேடிக் கண்டுபிடியுங்கள்" என்று கேட்டாள்.

இராமர் இயற்கைத் தாயான பூமாதேவியிடம் தண்ணீர் வேண்டிப் பிரார்த்தனை செய்தார். அப்போது அங்கே மயில் ஒன்று வந்தது. "தண்ணீர் எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியும். என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்" என்று இராமரிடமும் சீதையிடமும் கூறியது.
காடு அல்லவா? நீண்ட தூரம் செல்ல வேண்டும். அவர்கள் வழி தவற விடாமல் இருக்க வேண்டி, அடையாளத்துக்காக மயில் தனது இறகை ஒவ்வொன்றாகப் பிரித்து, தான் செல்லும் பாதையில் போட்டுக் கொண்டே சென்றது. இதனால் இராமரும், சீதையும் வழி தவறாமல் மயில் சென்ற பாதையைப் பின் தொடர்ந்தார்கள்.

நீண்ட தூரம் நடந்தபின், இராமரும் சீதையும் தண்ணீர்க் குளத்தைக் கண்டார்கள். ஆனந்தமாகத் தண்ணீர் அருந்தி இளைப்பாறினார்கள். அவர்கள் திரும்பிவந்த போது அந்த மயில் இறந்து கிடந்தது. தமக்கு வழிகாட்டும் பொருட்டுத் தன் இறகுகளைப் பிரித்துப் போட்டதனால் மயில் இறந்து போய்விட்டதை இராமர் உணர்ந்து மனம் வருந்தினார்.

“என்னுடைய எந்தப் பிறவியிலும் உன்னை நான் மறக்கமாட்டேன்” என்று நன்றியில் நெகிழ்ந்து நெஞ்சுருகக் கூறினார் இராமர்.

அதன் பிறகு அமைந்த கிருஷ்ணாவதாரத்திலும் அந்த மயிலின் நினைவாகவே மயிலிறகைத் தன் சிரசில் பகவான் சூடிக் கொண்டார் என்பது ஐதீகம்.

Whenever we pray to Lord Krishna or worship him, within our thoughts, we can see the flute in his hands and the beautiful feather of a peacock decorating his head. For Lord Krishna to choose a peacock’s feather in particular to decorate his head, there’s a reason and an emotional story behind it, which many of us do not know.

Rama Avadar occurred during the 'Thiretha Yuga' era. Rama and Sita, while they were living in the jungle, once got very thirsty, but they couldn’t find any source closely to get water.

Sita asked Rama, ‘I am thirsty. Please find a place to get some water’.

Rama prayed to the Goddess of Earth to find a water source. They then saw a peacock coming along their way. The peacock told them,
‘I know the place where the water is. You follow me. I’ll show you the place.’

They followed the peacock.

The peacock was being conscious that Rama and Sita might lose the way, in order to follow the correct route. It was a long journey both of them had to follow. The peacock, therefore, pulled off its feather one by one and dropped it along the route, in order to make Rama and Sita follow the right path.

Finally, they both saw a pond and reached it. They happily consumed the water and quenched their thirst. Thus they became refreshed.
After drinking the water, when they returned, they saw the peacock lying dead.

Rama realised that only due to the loss of its feathers, the peacock would have died. Both of them regretted seeing the peacock dead.

‘Whatever birth I may get, I won’t forget your help you offered us by sacrificing your life’ Rama told with a high sense of gratitude to the peacock.

It is a strong belief that Lord Krishna decorates his head with a peacock’s feather in remembrance of the peacock.

# கனவுப் பயணம்

வே பாலசந்திரன்

இந்தப் பாரெங்கும் மலைகளும் ஏரிகளும் நிறைந்து கிடக்கின்றன. ஆயினும் சிலவே தேர்ந்து கொள்ளப்படுகின்றன . அது ஏன் எதற்காக என்ற கேள்விகளுக்குப் பதில்கள் பலவாக அமைகின்றன. அதனதன் அமைவிடம் ,அழகு,சூழல் போன்ற காரணங்கள் தாண்டி வேறொன்று ஈர்ப்பாய் அமைவதேன்?

வேதகாலங்கள் தொட்டு இமயம் புனிதம் பெற என்ன காரணம்? கயிலை என்கின்ற போதே மெய் சிலிர்ப்பதேனோ நானறியேன். நிலைபேறு பெற்ற துருவன் மானசரோவர் ஏரியின் நேர்மேலே விண்மீனாய் ஒளிர்வான். அந்த ஏரியை ஒருமுறை தரிசனம் செய்ய வேண்டும். கயிலை மலையைக் கண்குளிரக் காணவேண்டும் என்ற பேரவா என்னுள் தீயாக எரிந்துகொண்டு இருந்தது. சிறு வயதிலே புராண இதிகாசங்கள் கேட்டுக் கேட்டு, பின்னர் பதிகங்களும் காவ-யங்களும் வாசித்து வாசித்து கண்டு வரவேண்டும் என்ற கனவு நனவானது எனது நல்லூழ்.
இத்தகைய பயணம் ஒன்றைத் தனியே செய்ய முடியாது. மனமொத்த பயணிகள் குழு ஒன்று அமைய வேண்டும். பயண ஏற்பாடுகள் செம்மையாகத் திட்டமிட வேண்டும். காலநிலை கணக்கிடல், பணியிட விடுமுறை பெறல், நுழைவிசைவு (விசா?) விண்ணப்பித்தல், நிதி ஒதுக்கிடல், பயண ஏற்பாடுகள் என எத்தனை வகை!. எண்ணவே மலைப்பாக இருப்பினும் கயிலையைக் காணும் அவா அனைத்தையும் வென்றது. இதற்காக எனது பங்களிப்பென எதுவுமே இல்லை. அனைத்தையும் முன்னின்று செய்த அன்பழகனுக்கும் சிவாவிற்கும் எனது அன்பு கலந்த நன்றி.

சீனாவின் பெருமதில் கண்டபின் அதிவேக இரும்பூர்தியில் பயணித்து லாசா சென்றோம். முதன்முதலாக 3650 மீட்டர் உயரத்தில் உலாவ, சுவாசிக்க உடலும் உள்ளமும் பழக வேண்டியிருந்தது. 10 மீட்டர் நடந்தால் 100 மீட்டர் நடந்த களைப்பு. திபெத்தின் நிலஅமைப்பு விசித்திரமானது. மலைகளும் ஏரிகளும் நிறைந்தது. மரங்கள் அதிகம் இல்லை. வெறும் புல்வெளிகள் தான். "யாக்" என்றழைக்கப்படும் புரி புரியாக நீளமயிர் கொண்ட மாடுகள் வழி-யெங்கும் மேயும். சிறுநகரங்கள் தாண்டினால் ஆளரவமற்ற, ஆனால் சிறப்பாக அமைக்கப்பட்ட பாதைகள். இடையில் வண்டியை ஓய்வுக்கென நிறுத்திய போது தொலைவில் தெரிந்த ஏரியை மானசரோவர் என்று சொன்னபோது மனம் வெறுமே நின்றது. அடர்நீல ஏரி என்று மூளை தரவு கொண்டது.



மானசரோவர்

அடுத்தநாள் மானசரோவர் அருகே செல்கையில் மனம் மிக அமைதியாக இருந்தது. எதிர்பார்ப்புகளென எதுவும் இல்லை. ஆனால் அருகே சென்று கால்நனைத்து, உச்சியில் நீர் தெளித்து, கை கூப்புகையில் "ஐயனே! ஐயனே!" என மனம் அரற்றத் தொடங்கியது. கண்கள் தானே வழிய நெஞ்சம் விம்மி அழுகை பீறிட்டது. அது ஒரு பேரநுபவம். மானசரோவருக்கும் எனக்கும் இடையே அழியாப் பிணைப்பு. பேரானந்தம். மாசறு நிலை. எனக்கான கொடுப்பினை இதுவென உணர்கிறேன். இதை எழுதும் போது எனது கண்கள் பனிக்கின்றன. எடுத்த படங்களை பார்க்கும் போதும் மீண்டும் மீண்டும் அதே உணர்வு. அள்ள அள்ளக் குறையாத கருவூலமென இது என்னுள் இருக்க அளிகூர்க ஐயனே!

திரும்புமிடமெங்கும் மலைமுகடுகள். காலையில் ஓரழகு மாலையில் வேறழகு மதியம் தனியழகு. வெள்ளி மகுடம் சூடியவை பொன்னாய் மின்னும். ஆடியென வெயிலைத் தெறிக்கும். நீண்ட பயணங்களில் சலிப்பை நீக்கும் மருந்து என்றே கூறலாம். பின்மாலை நேரமாக தங்குமிடம் வந்து சேர்ந்தோம். காலையில் கிரிவலம். அனைவருமே உற்சாகமாகத் தயாரானோம். பொதி சுமக்க காளை, கால் தளர்ந்தால் தோள் கொடுக்க குதிரை, வழியெங்கும் கைகொடுக்க வழிகாட்டி என ஏற்பாடுகளை செய்தபின் பயணம் தொடங்கியது. முதல்நாள் பயணம் முடியச் சற்று முன்பே கயிலையைக் காணலாம். அதுவே கண்கொள்ளாக் காட்சி. பனிமுடி சூடிய பேரழகு. அதனைப் பார்த்தபடியே உள்ள தங்குமிடத்தில் இரவு தங்கியபின் விடிகாலையில் அடுத்தநாள் பயணம். மிகவும் கடினமானது. சுவாசம் மிகக் கடினம். அதனாலேயே களைப்பு மேலோங்கும். அனைத்தையும் தாண்டி உச்சி சென்றபின் கயிலையின் மறுபுறம் கண்டோம்.



இனி, கீழே இறங்குவதுதானே என்று பார்த்தால் அது இன்னும் சாகசம். அதிகவனம் கோரும் வழித்தடம். இறங்கி வந்து அன்றிரவு இன்னுமொரு தங்குதல். மூன்றாம் நாள் மிகச் சுருக்கமான நடை. முதல் நாளுடன் ஒப்பிடுகையில் இலகுவானது. வலம் சுழியாக நாங்கள் வலம் வருகையில் இடவலமாக வரும் பயணிகளைக் காணலாம். கயிலை ஒரு புனித தலம். அது மதமற்றது. அனைவருக்குமானது. மத சின்னங்கள் எங்குமே இல்லை எனலாம். மந்திரங்கள் அச்சடித்த வண்ண வண்ணக் கொடிகள் உச்சியில் உண்டு. ஆனால் அது திபெத் பண்பாடு என நினைக்கிறேன்.

கிரிவலம் வந்த நாளெல்லாம் அருமையான காலநிலை. நீண்ட நாள் கனவு ஒன்று நிறை வேறியது. மகா முனிகள் நடந்த தடத்தில் நானும் நடந்தேன். மனம் இது போதும் என்று நிறைவு கொண்டது.

# SAIVA SCHOOL OF HINDUISM

## (By late S. Shivapathasundaram B.A)

### CHAPTER 5
### AANAVA (ஆணவம்)

**The Place of Anava in Right Action**

We have seen that wrong acts are caused by Anava and that the effect of the wrong acts weakens Anava. We must now see if Anava has any share in the performance of right action.

Every human being does righteous acts. Almost all human beings are under the grip of Anava. Therefore, Anava exercises influence even over those who do righteous acts. The problem is whether it influences the performance of such acts.

Right action proceeds from fear of suffering, love of gain, or the conviction that it is right.
A person is dissuaded from a wrong act through fear of direct retribution, as when he is punished in a court of law, or of indirect punishment as social boycott or of remote suffering such as hell-fires menti oned in some religious scriptures.



The suffering comes either to the mind or to the body, which is not the soul. Regarding either of these sufferings as one's own suffering is due to a misapprehension, which is the result of Anava. Therefore fear of suffering is occasioned by Anava, and its share in right acts induced by fear, has to be admitted.

As regards love of gain, gains are really the opposite of suffering and belong to the same class. What is true of suffering must be true of gain, and the influence of Anava on right action, proceeding from love of gain is easily seen.

Coming to the third cause of right action, we find that the influence of Anava in this is at its lowest ebb. The doer of a right act is able to do what is right bcause he sees that a particular act is right, feels that he ought to do it, and does it. But there is in him the feeling of 1-ness. He says, "I ought to do it'' and this "I" is the first offspring of Anava. Not only in ordinary right actions, but even in religious worship, when a man adores God as "you"' and refers to himself as "I,'' Anava is there and exercises its influence.

But the domination of I-ness in right acts is more likely to hurt Anava than benefit it. The moment the person realizes that right action is beneficial to him, he will follow it with all his might. It increases his power to desire and do the right, and thus works against Anava. As right acts are followed by pleasure, there is an additional flow of the power to desire and do

right. Right action thus causes a steady increase of the powers of knowing, desiring and doing. The result is that the man who began to do right to gain some ends, learns to do it in the absence of such motives. He will do right for its own sake and later lose even the feeling of I-ness.

The Effect of Right Action on Anava
Thus righteousness, which was started by one aspect of I-ness, has been slowly killing another aspect of it, its very essence. The sense of egoism and the desire to enjoy oneself and to dominate others fast disappear. The narrow individualism passes away.

The I-ness is gradually extended till the "I" is identified with the whole creation. The capacities are filled with the necessary energy and the constricting power is in its last gasp. The man then extends himself even beyond the universe. His knowledge is so full that he realises the existence of something beyond the universe, an ideal of perfection. He then sees that ideal. Then the I-ness and My-ness disappear altogether and he becomes the ideal itself. Anavic power is at an end.

If now the man acts, be does not feel that he acts, because he sees not himself. The soul becomes, as it were, the body of God. Just as the body only does and never says that it does, so the soul acts but feels not that it acts. Anava is gone. All the troubles of the soul are at an end. It knows no sorrows, and knows not even joy; for without sorrow there can be no joy.

What it experiences can only be described as a joyless joy.

## CHAPTER 6
## MAYA (மாயை)

The stibstance of this chapter is largely philosophical and cannot be brougt under the domain of science. This is included here as an account of Saiva philosophy would be incomplete without it]

We see that man is able to know, to desire, and to do, whereas the soul has only the abilities for these activities, but neither the energies nor the faculties necessary for them. These come from another entity, which we have called Maya. It is the source not only of these, but also of the worlds and the things that are in them. It has been possible to make a study of God and Anava by their relationship with us, but Maya will have to be studied from its products. These present themselves during an analysis of the soul's activities, as we shall now see.

**Tools of Knowing**

Consider the activities of perceiving a book. Light from the book passes into the eye and falls and falls on the retina. It is carried in some other form by the optic nerve to the optical centre in the brain.



This must be transformed into the shape of the book before it is presented to the soul. For, what the soul sees is a book and not the effects of light vibrations. Therefore there must be some tool which transforms these into the shape of the book. This tool supplied by Maya may be called the organ of sight. It is a mistake to call the physical eye as a sense organ. It doesn't sense anything. It is an equipment only.

This has not been identified in the body and is therefore not formed of material substance. It must be superphysical. When the organ has transformed the effects of light into the form of a book, the soul it only if it possesses the energy to know.



This energy is a product of Maya, but cannot freely reach the soul as its ability is constricted by Anava. A tool is necessary to counteract the constriction and to allow the energy to reach the soul. This tool Saiva philosophy has named Vidya.

When the figure of the book is thus presented to the soul, it sees it but cannot cognize it. It can only be aware of the mere existence of the thing. This knowledge is called Nirvikalpa (undifferentiated knowledge). It is really with the help of Manas that the soul sees this. The work of the Manas is to catch impressions, to attach to things and to desire. At this stage, the soul requires a tool to relate it to things already known.

When the sensation of a new animal is received, the intellect tries to place it in a known species by observing itsqualities. This knowledge is Savikalpa (differentiated).



The tool used for this purpose is called Buddhi (intellect). In the act of cognizing the book, the soul thus makes use of the power of knowing and the three tools, the organ of sight, Vidya, and the intellect. Besides the organ of sight there are the organs of sound, touch, taste, and smell, making five organs of sensing. Perception through the senses thus involves the use of seven tools; the five organs of sense, Vidya, and Buddhi.

## Tools of Desiring

When the soul is aware of the existence of a thing, it desires to have it if it is useful to it.




Desiring consists of two elements:
1.the knowledge that a particular thing is desirable and,
2.the act of forming an attachment to the object.

The energy necessary for this is that of knowing and doing. This dual energy must reach the soul. The ability for desiring being constricted by Anava, a tool is necessary to relax the constriction. This tool is called Raga. When the soul has got the power of desiring, it requires a tool with which to desire. This tool is called Manas (an aspect of the mind).

Thus desiring requires the tools Raga and Manas, besides the energy to desire. The Manas is ever active, attaching itself to something or other. This unceasing activity of the Manas makes life much fuller than it would otherwise be. Once it has got into the habit of attaching itself to a particular thing, it goes up to it even if, later, it is of no value or is even harmful.

## Tools of Doing

When the soul conceives a desire, it may follow it up with action. If the desire is to think, the work is done by the intellect. If the desire is to do some physical action, a large number of tools are involved in the act.

Suppose the soul desires to take a book. Then the hand goes towards it, moved by means of impulses sent along certain motor nerves. These, in turn, must be controlled by some organ. Such an organ has not been found in the body and must be a superphysical tool like the organ of sense.

Saiva philosophy calls it the hand-organ. (The hand organ controls not only the motor nerves that move the hands, but also those that cause similar motions, as that of the eyelids). This organ is controlled by what Saiva philosophy calls Ahankara (will).

This, in turn, works at the instance of the soul. For this, the soul must be supplied with energy, and the Anavic constriction of the ability to do must be counteracted. The counteracting tool is called Kala.

The difference between the stimuli of the organ of sight and of the hand-organ is that the stimulus of the former comes from outside as a light vibration and that of the latter comes from the Ahankara (will). To the class of handorgan belong the organs that control the work of the mouth, the legs, the excretory organs, and the secretory organs, making five tools in all.

The following sixteen tools are thus found to be necessary for the three activities of the soul: to know, to desire, and to do:

1. Five organs of sense.
2. Five organs of action.
3. Three tools for (a) thinking, (b) desiring, and (c) doing viz. the Buddhi (intellect), the Manas (an aspect of the mind),and the Ahankara (will).
4. Three tools respectively to counteract Anavic constriction viz. Vidya, Raga, Kala.

These are tabulated below:

| **Activities** | **Bodily Tools** | **Intermediate Tools** | **Internal Tools** | **Anti Anavic Powers** |
|---|---|---|---|---|
| **Knowing** | The Eye, Ear, Nose, Tongue and Skin. | Five organs of sense (Sight, Hearing, Smell, Taste and Touch) | Buddhi (Intellect) | Vidya |
| **Desiring** | - | - | Manas | Raga |
| **Doing** | Hands, Legs, etc. | Hand, Leg, etc. | Ahankara (will) | Kala |

**Tools of Regulation**

There are two powers which we have passed over. We have seen that when we walk along the road many objects catch the eye but only a few are perceived. There must be some power to determine what must be observed or known, what must be desired, and what must be done. This power is Kala in Saivaism.
This directs the tools that counteract Anavic constriction according to a certain law. The law is that the soul must know, desire, and do what is best for its evolution. This power obeys God's Love, which is the ultimate agent of evolution. It is assisted by another power which determines the nature of the pain or pleasure that follows the acts of knowing, desiring, and doing. Saiva philosophy calls this Niyati.

(To be continued)

# ஆறுமுக நாவலர்

சாவித்திரி ஆனந்தன்



ஆறுமுக நாவலர் என்ற பெயரைக் கேட்டதுமே நம் எல்லோருடைய மனக் கண்களிலும் நிழலாடுவது அவருடைய தோற்றம். நெற்றியிலும், மேனியிலும் திருநீற்றுக்குறி. கழுத்தில் உருத்திராக்க மாலை. விரித்தபடி ஒரு புத்தகம் கைகளில். கண்களில் சுடர்விடும் அறிவின் பேரொளி. இவற்றுடன் பத்மாசனமிட்டு அமர்ந்திருக்கின்ற அந்த நிலை.

இவற்றைவிட, ஆறுமுக நாவலர் என்றதுமே அவர் எழுதி நாம் சிறுவயதில் படித்த “சைவவினா விடை” புத்தகம் நினைவுக்கு வரும். விரதம் என்பது யாது? விபூதியை எப்படி அணிய வேண்டும்? சிவனைச் சிவபெருமான் என்று ஏன் அழைக்கிறோம்? என்பன போன்ற, சைவ சமயத்தினர் ஒவ்வொருவரும் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டிய எல்லா நியமங்களையும் வினாவிடை வடிவில் அவருடைய சைவவினா விடைப் புத்தகம் விளக்கி நிற்கிறது.

ஏறத்தாழ 400 வருடங்களுக்கு மேலாக ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்தில் சிக்குண்டு செயலிழந்து கிடந்த இந்து தர்மம், தமிழ்க் கலாசாரம் என்பவற்றின் மறுமலர்ச்சி இலங்கையில் மட்டுமல்ல.... இந்தியாவிலும் ஏற்படுவதற்கு வழி செய்த பெருந்தகைகளில் நாவலர் பெருமான் முக்கியமான ஒருவர்.

பன்னிரண்டாவது வயதிலேயே தன்னுடைய அதீத திறமையால் தமிழ் - சமஸ்கிருதம் ஆகிய இரண்டு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றார். அதன் பிறகு ஆங்கிலக் கல்வி கற்பதற்காக, அன்றைய முன்னணிப் பாடசாலையாய் இருந்த மெதடிஸ்த ஆங்கிலப் பள்ளியில் இணைந்தார். ஆறுமுகம்பிள்ளை என்ற இந்தப் பதினாறு வயது மாணவனுடைய அசாதாரண திறமையை அந்தப் பாடசாலையின் மேலாளராக இருந்த பாதிரியார் பீட்டர் பேர்சிவல் இனங்கண்டார். கல்வி கற்கும் போதே, கீழ் வகுப்புகளுக்கு ஆங்கிலமும், மேல் வகுப்புகளுக்குத் தமிழும் கற்றுக் கொடுக்கும் பணி இந்த மாணவனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, பாதிரியார் பேர்சிவல் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த மாணவ ஆசிரியன் தனது 19 வயதில் விவிலியம் எனத் தமிழில் கூறப்படுகின்ற பைபிளைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியை ஏற்றுக் கொண்டார். சில நிபந்தனைகளை முன்வைத்து, அவர் இந்தப் பணிக்கு ஒப்புக் கொண்டார். சமய அனுட்டானங்களை மேற்கொள்ளவும், சைவ சமயப் பிரசாரங்களில் ஈடுபடவும், தனக்குப் பூரணமான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்பவை அந்த நிபந்தனைகளாகும். பாதிரியாரும் அவற்றை ஏற்றுக் கொண்டார்.

அதே காலப்பகுதியில் இந்தியாவிலும் தமிழ்ப் பண்டிதர்களின் குழு ஒன்று, இந்த மொழி பெயர்ப்பைச் செய்தது. நாவலருடைய மொழி பெயர்ப்பும் சென்னையில் ஒப்பு நோக்கப்பட்ட போது, நிறையவே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. இறுதியில், அறிஞர் மழவை

மகாலிங்கையர் என்பவரிடம் இரண்டு தரப்பு மொழி பெயர்ப்பும் ஒப்படைக்கப்பட்டன. யாழ்ப்பாணத் தமிழே சிறந்தது என்று மகாலிங்கையர் சான்று வழங்கியதுடன், நாவலருடைய புலமையையும் சிலாகித்துப் பேசினார். நாவலருடைய மொழி பெயர்ப்பே சிறந்தது என மிஷன் ஏற்றுக்கொண்டது. எனவே, பைபிளைத் தமிழில் முதன் முதலில் மொழி பெயர்த்தவர் என்ற பெருமை நாவலரையே சாரும். தமிழராய் இந்தப் பெருமை உலகம் உள்ளளவும் எங்களையும் தலை நிமிர வைக்கும்.

சைவ சமய மறுமலர்ச்சியின் ஒரு அங்கமாக, தமிழில் சாதாரண உரைநடை முறையை நாவலர் அறிமுகப்படுத்தினார். அத்துடன், வேறு வேறு பாடங்களுடன், இந்து சமயப் பண்பாடு கலாசாரம் என்பவற்றைக் கற்பிக்கக் கூடிய பள்ளிகளை உருவாக்கினார். இவை கிறிஸ்தவ மிஷன் பாடசாலைகளுக்கு ஒப்பான தரத்தில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ். வண்ணார் பண்ணையில் இன்றும் இயங்கி வருகின்ற சைவப்பிரகாச வித்தியாசாலை நாவலரால் உருவாக்கப்பட்டது என்பதை அனைவரும் அறிவோம். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, தமிழ்நாடு சிதம்பரத்திலும் இதே போன்று ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடக்கி வைத்தார். வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் ஆறுமுகம்பிள்ளை என்ற இந்த இளைஞனுடைய முதல் சமயப்பிரசங்கம் அரங்கேறியபோது அவருக்கு அகவை 25.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெற்ற இந்தப் பிரசங்கம் சைவசமயம் தொடர்பான ஒரு அழகான புரிந்துணர்தலை மக்களிடம் ஏற்படுத்த ஏதுவாக அமைந்தது. தனது முழு நேரத்தையும் சமய வளர்ச்சிக்காகவே செலவிடத் தீர்மானித்து, ஏற்கனவே தான் துறந்திருந்த மெதடிஸ்த பாடசாலைப் பணிபோலவே, மத்திய கல்லூரி ஆசிரியப் பணியையும் அவர் துறந்தார்.

சைவப் பிள்ளைகளுக்குப் பாட நூல்கள் அச்சிட ஒரு அச்சியந்திரம் தேவை. என்ன செய்யலாம்? சைவத்தின் காவலர் யோசித்தார். நல்லூர் சதாசிவம்பிள்ளை என்பவருடன் சேர்ந்து சென்னைக்குப் பயணமானார். அந்த வேளையில், திருவாவடுதுறை ஆதீனத்தில் இவர் ஆற்றிய சைவப்பிரசங்கத்தின் ஆழம் கண்டு, இவர் புலமையைப் பெரிதும் வியந்து பாராட்டி, "நாவலர்"என்ற பட்டம் வழங்கப்பட்டது. ஆறுமுகம்பிள்ளை ஆறுமுக நாவலர் ஆனார். "வசனநடை கைவந்த வல்லாளர்" என்று தமிழ் உலகம் அவரைப் பாராட்டியது.

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமி ழெங்கே சுருதிஎங்கே - எல்லவரும்
ஏற்றுபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கம்எங்கே
ஆத்தனறி வெங்கே அறை.

என்று நாவலர் காலத்துத் தமிழை அறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளையும், வேறு பல அறிஞர்களும் பாராட்டினார்கள்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றிச் சென்னையிலும் அச்சியந்திரம் வைத்துப் பல பல சமய நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். பிழை கண்டால், யாருக்கும் அஞ்சாமல் சுட்டிக்காட்டும் துணிச்சல் நாவலரிடம் இருந்தது. நல்லூர் கந்தசுவாமி கோயில், ஆகம விதிப்படி அமைக்கப்படவில்லை என்ற உண்மை அறிந்துகொண்ட போது, இது பற்றி ஆலய நிர்வாகத்துடன் வாதிட்டவர் நாவலர். சைவ இலக்கியங்களான தேவாரம், திருவாசகம் என்பவற்றை அடிப்படையாக வைத்தே வள்ளலார் திருவருட்பாவை ஆக்கித் தனக்குப்பிரபல்யம் தேடியிருக்கிறார் என்றொரு வாதமும் நாவலரால் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வேத- ஆகம புராணங்களைக் கற்றுக்கொண்ட போது, நாவலர் பெருமான் ஒரு உண்மையை உணர்ந்து கொண்டார். சைவசமயம் பற்றிய தெளிவான அறிவும், ஆழமான புரிந்துணர்வும் இருந்தால் மட்டுமே ஒவ்வொரு சைவக் குடிமகனுக்கும், கால ஓட்டத்தின் மாற்றங்களை எதிர்கொண்டு வேரூன்றி நிற்கக்கூடிய ஆற்றலும் துணிவும் வசமாகும் என்பதே அந்த உண்மை. நவீன அச்சியந்திரத்தை முதலில் அறிமுகம் செய்த நாவலர் சைவசமயத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, அதற்கு எதிரான போக்குகளை விமர்சித்து எழுதினார். பனையோலைச் சுவடிகளை உருவாக்கினார். இவ்வாறு, சைவத்தைப் புனரமைக்க நாவலர் மேற்கொண்ட முயற்சிகள் குறுகிய மனப்பான்மை கொண்டவை என்றும், அரசியல் நோக்கமுடையவை என்றும், உயர் சாதியினருக்கு மட்டுமே சார்பானவை என்றும் பலவிதமாக விமர்சிக்கப்பட்டன.

சைவசமயப் பணிகளில் தன்னை முழுவதுமாய் ஈடுபடுத்தக் குடும்ப வாழ்க்கை இடையூறாக அமையக் கூடும் என்ற நினைப்புடன் பிரமச்சரியம் மேற்கொண்டார் நாவலர் பெருமான்.

அழகான, எளிமையான உரைநடையில் அவர் எழுதிய சிறுவர்களுக்கான “பாலபாடம்” என்ற புத்தகம் மிகவும் பிரசித்தி வாய்ந்தது. “தந்தை தாய் பேண்” என்ற நீதி மொழியை வலியுறுத்தும் விதமாக ஒரு கட்டுரை அந்தப் பாலபாடம் ஒன்றில் வெளிவந்திருந்தது. ‘சிசிலி’ என்ற தீவில் ‘எட்னா’ என்றொரு எரிமலை கதை சொல்லுதல். “தந்தை தாய் பேண்” என்ற நீதி மொழியை அனுசரித்து இந்தப் பிள்ளைகள், மாதா பிதாக்களைச் சுமந்து கொண்டு போன வழியானது, “சற்புத்திர மார்க்கம்” என்று கூறப்பட்டுப் பிள்ளைகளுடைய நீதியாகிய அறிவொழுக்கங்களை வெளிப்படுத்தும் ஒன்றாக அமைகிறது.

எளிமையான உரைநடையில் இவ்வாறான அவருடைய எழுத்துகள் பள்ளிப்பிள்ளைகள் தொடக்கம் பெரியவர்கள் வரைக்கும் மிகவும் பயனளித்தன. சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் நாவலர் பெருமானால் அச்சிடப்பட்டு வெளிவந்த நூல்கள் ஏராளம்.

தமிழ்- தமிழ் அகராதி, தமிழ்- ஆங்கில அகராதி அனைத்தும் அவரது படைப்பில் வெளிவந்தன. இன்று தமிழ் இலக்கணம் சிறிதேனும் வளம் குன்றாமல் அதற்கேயுரிய அழகிய உயிர்ப்புடன் இருக்கிறதென்றால் அதன் காரணம், நாவலர் அவர்களால் எழுதப்பட்ட இலக்கண நூல் என்றால் அது மிகையல்ல.

அனைவராலும் மதிக்கப்பட்டு “ஐயா” என்று மரியாதையோடு அழைக்கப்பட்ட திரு. சொக்கலிங்கம் என்பவரே நாவலரிடம் தமிழ் பயின்று, அவரைத் தன் குருவாக ஏற்று, “நாவலர் குரு ஸ்துதி” என்ற நூலையும் உருவாக்கினார் என்ற செய்தி, நாவலர் பெருமான் என்பவர் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் கிடைத்த அரியதொரு வரப்பிரசாதம் என்பதையே காட்டி நிற்கிறது. இப்படிப்பட்ட ஒரு ஞானவானை, சைவத்தைத் தனது உயிராய் மதித்த சமயக் காவலரை, தமிழும் சைவமும் இத்தனை தூரம் தழைத்தோங்கக் காரணமாயிருந்த சைவப் பெருமானாகிய நாவலரை நினைவு கூர்ந்து போற்றி வணங்குதல் எமது தார்மீகக் கடமை என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

*(1879 ஆம் ஆண்டு தனது 57 ஆவது அகவையில் இயற்கை எய்திய ஆறுமுக நாவலர் பெருமானுடைய 146 ஆவது நினைவுதினம் 2025 December 5 ஆம் நாளில் நிறைவுற்றது. சைவ முன்னேற்றச் சங்கம் வருடந்தோறும் கொண்டாடும் நாவலர் குருபூசையன்று திருமதி சாவித்திரி ஆனந்தன் ஆற்றிய உரை இது.)*

# பொங்கல் திருநாள்

திரு க செல்வரத்தினம்

பண்டிகையோ விழாவோதான் ஒரு இனத்தினுடைய கலாசார பாரம்பரியத்தை வெளிக்காட்டும். இயற்கையை நடுநாயகமாக வைத்துக் காலநிலை தொழிலோடு இணையும் வகையில் அவை கொண்டாடப்பட்டு வருகின்றன. இவை மக்களிடையே கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தவும், குடும்ப சமுதாய ஒற்றுமையை வளர்க்கவும் புத்துணர்வோடு மனமகிழ்வையும் வளர்க்க உதவுகிறன. இன்று பொருளாதார, அரசியல், கல்வி காரணங்களுக்காக பிறந்தகத்தில் இருந்து புலம் பெயர்ந்து மேற்கு உலக நாடுகளில் வாழும் மக்கள் சூழ்நிலையில், எதிர்கால சந்ததியினர் பின்பற்றும் வகையில் வழிகாட்ட வேண்டும். எது எமது தாயகம்? எது எமது இனம் எது எமது சமயம்? என்பதை அறிந்துணரும் வண்ணம் புலம் பெயர் மக்கள் இளஞ்சந்ததியருக்கு வழிகாட்ட முடியும்.

சீவக சிந்தாமணியில் “எழுந்த தீம்பால் பொங்கல்” என்றும் புறநானூறில் “ஏற்றுக உலையை, ஆற்றுக சோறை” என்றும் குறிப்புகள் காணப்படுகின்றன.
முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரம்:

“ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்”
“மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்”

என ஞாயிறையும் மழையையும் போற்றுகின்றது. அத்துடன் உழவர்களால் எடுக்கப்படும் அறுவடை பற்றிய தகவல்களையும் சிலப்பதிகாரம் சொல்கிறது:

“ஏரொடு நின்றோர் ஏர்மங்கலமும்,
பெருஞ் செந்நெல்லின் முகவைப் பாட்டும்” - நாடுகாண் காதை

திருப்பாவையில் ஆண்டாள் நாச்சியார், “மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்நாளால், நீர் ஆடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்” என்கிறார். மாணிக்கவாசக சுவாமிகளும் திருவெம்பாவை மூலம் நீராடல், மழை, நாடு செழிக்கவும், நல்ல கணவன் கிடைக்கவும் எதிர்பார்க்கும் வேண்டுதல்கள் தகவல்களை அவர்கள் வாயிலாக நிறையத் தந்துள்ளார்.

பண்டிகை - தை மாதம் - உத்தராயணம்
சூரியன் தனு ராசியில் இருந்து மகர ராசியில் புகும் காலம் மகர ரவி எனப்படும். அதுவே உத்தராயண காலமாகும். சூரியன் வடக்குநோக்கிச் செல்லும் எனக்கொள்ளலாம். தை முதல் ஆனிவரை உள்ள காலம் உத்தர அயன காலமெனப்படும் .வட நாட்டிலே மகர சங்கிராந்தி என்பர் உயிர்களின் வளர்ச்சிக்கும் உணவு உற்பத்திக்கும் வேண்டிய சக்தி, ஒளி, வெப்பம் ஆகியவற்றைத் தருபவன் சூரியன். சூரியனை வணங்கும் மரபு தமிழ் மக்களிடம் தொன்று தொட்டு வருகிறது. விருத்தியடைந்த நாடுகளான பாபிலோனியா, எகிப்து கிரேக்கம், ரோமாபுரி, பாரஸீகம் ஆகிய நாடுகளில் சூரிய வணக்கம் காணப்பட்டது. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி மக்கள் சூரியனைத் தெய்வமாக வழிபட்டனர். இங்கு கண்டெடுக்கப்பட்ட முத்திரை ஒன்றில் ஆறு தலைகளோடு கூடிய சூரிய வடிவமொன்று கண்டெடுக்கப்பட்டது. இது பெரும் பாலும் தமிழ் மக்கள் நாகரிகம் என ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

தமிழ்மக்களின் முக்கிய தொழிலாக விளங்குவது விவசாயமே. விவசாயத்திற்கு மூலகாரணமாக விளங்குபவன் சூரியன். சக்தியை பல வழிகளில் தரும் அவனுக்கு அறுவடை மூலம் பெற்ற விளைச்சல் பயனை பெறுவதால் நன்றிக் கடனைச் செலுத்த உழவர் பொங்கிப் படைத்து விழாவெடுத்து மகிழ்வர். இலங்கை, தமிழகம் போன்ற நாடுகளின் நிலப்பரப்பு மத்திய கோட்டுக்கு வட அரைக்கோளத்தில் காணப்படுகிறது. பொங்கல் உழவர் விழாவாகத் தொடங்கப்பட்டு மக்கள் விழாவாக பரிணமித்துள்ளது. பிறந்தகத்தில் வாழும் தமிழர் இதை ஆக்க பூர்வமான விழாவெனக் கொள்வர். தீபத் திருநாள்களில் மக்களுக்குக் கொடுமையான ஆட்சியை தந்தவனின் அழிவைக் கொண்டாடும் விழாவாக நினைக்கும் எமக்கு ஆக்க பூர்வமான வளர்ச்சியை அமைந்தது தைத் திருநாளானது உற்பத்தியை ஆக்கத்தைப பற்றி எண்ணியது சிந்தனை வளர்ச்சியே.

தமிழ் மொழிமூலம் IAS அதிகாரி திரு சு. பாலகிருஷ்ணன் அவர்கள் பீகார், ஒறிஸா ஆகிய பகுதிகளில் கடமை புரிந்தும் சிந்து வெளி நாகரிகப் பகுதியில் மேலும் ஆராய்ந்து பயனுள்ள கண்டுபிடிப்புக்களை வெளியிட்டுள்ளார். ஒறிஸா மக்கள் பலாப்பழம், மாம்பழம், கேழ்வரகு விழா கொண்டாடுகின்றனர் இவர்கள் வாழும் இடங்களில் காணும் நாட்டுப் பெயர்கள் இடம் பெயர்ந்த போது கொண்டு சென்றிருக்க வேண்டும். விவசாய உற்பத்தி ஆரம்பிக்கமுன் பழ மரவிழாக்கள் கொண்டாடிவருவது பற்றி அவர் கூறுகிறார். தமிழர் புத்துணர்வு ஏற்படும் வண்ணம் புதுப் பானை புத்தரிசி என புத்துணர்சசி ஏற்பட கொண்டாடுகிறோம். வாழ்வில் எதிர் நோக்கும் சவால்களை நம்பிக்கையோடு மனங்களில் எடுத்துச் செல்லவே நம்மவர்க்கு கையளித்துச் சென்றுள்ளார். உயிரினங்கள், தாவரங்கள் உயிர் வாழ்வது சூரியனால் என நம்பிய மக்கள் இயற்கை வழிபாட்டில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

கிரேக்கர் அப்பலோ என்றும் ரோமர் ஸீரிஸ் என்றும் தமிழர் ஞாயிறு என்றும் சூரியனைப் போற்றுகின்றனர். இன்று தைப் பொங்கல், சூரியப் பொங்கல், உழவர் பொங்கல் விரிவடைந்து மக்கள் பொங்கலெனப் பரிணமித்துள்ளது. Fertility Ceremony எனத் தமிழர் கொண்டாடுவதன் பொருள் பிறப்பு - இறப்பு என்ற குற்றத்துக்கு அப்பாற்பட்டு ஆக்கத்தைக் கொண்டாடும் விழாவென வரைப்படுத்தலாம். மணிவாசகரும் "இருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று" எனப் பாடுகிறார். தமிழர் பண்பாட்டில் உழவர் விழாவெனக் கொண்டாடுகின்றோம். வள்ளுவரின் உலகப் புகழ் மிக்க திருக்குறளும் எமது உயரிய சிந்தனைகளைப பிரதிபலக்கின்றது.

"உழுவார் உலகத்தாருக்கு ஆணிஅ.:. தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து - குறள் - *1032* என்றும்
"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர் - குறள் -*1033* என்றும்

குறள் சொல்கிறது.

முனைவர் பா. இறையரசன் தமிழர் நாகரிக வரலாறு என்ற நூலில் இந்திரன் சூரியன் மாடு பெண்கள் ஆகியோருக்கு நன்றி செலுத்தப்படும் விழா என்கிறார். தைப் பொங்கல் விழா நான்கு நாள் கொண்டாட்டமாகும்.

*1.* மார்கழி இறுதி நாள் அன்று பழைய பொருள்களை எரித்தோ தேவையற்ற பொருள்களை அப்புறப்படுத்தியோ பயன்படுத்தாத பொருள்களை தர்ம நிறுவனங்களிடமோ வசதி குறைந்தவர்களுக்கோ கையளிப்பர். சிலப்பதிபகாரத்தில் இந்திரவிழா எனக் குறிப்ப்பிடப்படுவது ளரசிடரள றநயடவா வணிபத்தால் அபரிதமான வந்த வருமானம் காரணமாக செலவு செய்த

செல்வந்தர் விழாவைக் கொண்டாடுவர் வீட்டை அழகு படுத்துவர். வெள்ளை அடிப்பது போன்றவை நடைபெறும். தற்காலத்தில் இந்திரவிழா இல்லாமல் போய் விட்டது.

2. அதற்குப் பதிலாக திருவள்ளுவர் ஆண்டாகவும் புத்தாண்டாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றது. திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தையடுத்து வான் சிறப்பு பற்றி வலியுறுத்துகின்றார். இயற்கை வழிபாட்டைத் தமிழ் மக்கள் நம்புகின்றனர். நவக்கிரக வழிபாடு. கிரகங்கள் சூரியனை மையமாகக் கொண்டவை. மேலும் சிவபெருமானின் கண்கள் சூரியனையும் சந்திரனையும் குறிப்பதால் சூரிய பொங்கல் சிவனைக் குறிக்கும் வழிபாடாகவும் கொள்ளலாம். அதேவேளை சித்திரை வருடப் பிறப்பை நாம் மறந்து விடலாகாது வள்ளுவரும் சித்திரை புத்தாண்டைக் கொண்டாடி இருக்கக் கூடும். எமது பாரம்பரியத்தை 5000 ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த நிகழ்வை மழுங்கடிக்க முடியாது தானே.

தைப்பொங்கல் நாள்- நிகழ்வு

பண்டைத்தமிழரின் விருந்தோம்பல் சிறக்கும் வண்ணம் முக்கனிகளும் முற்றிக் கனிந்து இஞ்சியும் மஞ்சளும் கரும்பும் முதிர்ந்து செந்நெல்லும் விளைந்து வீடு வருகின்ற காலம் தைத் திங்களாகும். வைகறையில் நீராடிப் புத்தாடை அணிவர். முற்றத்தில் பசுஞ் சாணத்தினால் மெழுகிக் கோலமிட்டு நிறைகுடம் வைப்பர். மலர்கள் தூவி தேங்காயும் வைப்பர். பொங்கற் பானைக்கு இஞ்சிமஞ்சள் இலைகள் கட்டுவர். பானையை மண் அடுப்பில் ஏற்றி, பசும்பால் பெய்வர். பால் பொங்கி வரும்போது மகிழ்ச்சி ஆரவாரத்தோடு “பொங்கலோ பொங்கல்” என உரத்து வாழ்த்துவர் புத்தரிசியை இடுவர். பாடசாலை மாணவர்களும் பாடசாலை பொங்கல் விழாவில் கலந்து கொள்வர். பயிற்றம் பருப்பு முந்திரிகை வற்றல், வெல்லம் என்பவற்றை இட்டு, பொங்கல் மணம் கமழ இறக்குவர். ஒளி விளங்க எழும் கதிரவன் கிழக்கில் தோன்றுவான் தலைவாழை இலை விரித்து பொங்கலைப் படைப்பர். முக்கனிகளுடன் விளாம்பழம், கரும்பு, பண்ணியங்கள், பலகாரம், சேர்த்து படைத்து கதிரவனை வணங்குவர். சுற்றத்துடன் சேர்ந்து உண்டு மகிழ்வர். மாணவர் பங்களிப்பு எமது பண்பாடு கலாச்சாரத்தை பறைசாற்றும்.

3. பட்டிப் பொங்கல் - மாட்டுப் பொங்கல்

பயிர்களை விளைவிக்க உழுது உதவுவது காளை மாடு. ஆனைந்தும் (பால் தயிர் மோர் வெண்ணெய் நெய்) வழங்குவது பசு மாடு. அவைகளை நீராட்டி மாலை அணிவித்து அழுகு படுத்துவர். பொங்கலையும் கனிகள் பண்ணியங்களையும் மாடுகளுக்கு உணவாகக் கொடுப்பர். பட்டிப் பொங்கலையும் அயலவர்களுக்கு வழங்கி மகிழ்வர். கவலைகள் மறைகின்ற இன்பத் திருநாள் தைப் பொங்கலின் மாட்டுப் பொங்கலாகும்.

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை”. - குறள்- 400

என்றைக்கும் அழிவில்லாத செல்வம் பெருஞ் செல்வம் கல்வி ஒன்றே. உழவுத் தொழிலுக்கு ஆதாரமாக இருப்பது மாடு. கல்வியும் பொருட் செல்வ மூலதனம் போன்று அக்காலத்தில் மாடும் பொருட் செல்வ மூலதனமே.

4 காணும் பொங்கல்

ஆதிச்சநல்லூர் அலங்காநல்லூர் ஆகிய இடங்களில் ஜல்லிக் கட்டு நடைபெறுவது வழக்கம். ஏறு தழுவுதலில் காளையின் நெற்றிப்பொட்டில் (மஞ்சு அடக்கலில்) சல்லிக் கட்டிவிடுவர் அடக்குபவனுக்கு பரிசு அளிப்பதும் மேலும் சுயம்வரம் நடத்தி தகுதியான பெண்ணை திருமணஞ் செய்து வைப்பர். பரிசுத் தொகை அதிகமில்லை என்றாலும் கௌரவிப்பது சிறப்பானதே. காணும் பொங்கல் உழவுத் தொழிலுக்கு உதவிய சூரியனை வழிபட்டு உலக மக்கள் உவகை பெறுவதால்

இளஞ் சூரியனைக் கை கூப்பி வழிபடுகின்றனர். உலகை இயக்குவதாக சூரியனை வழிபடுகின்றனர். கடவுளாகிய இந்திரன் மாடு பெண்கள் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றனர். காணும் பொங்கல் குறிப்பாக கன்னிப் பெண்களுக்கென கொள்ளலாம் குழந்தைகள் வயதானவர்கள், நடுத்தரப் பெண்களெனப் பார்க்காமல் காணும் பொங்கல் என்றதில் அவை அடங்கும். நோன்பு வழிபாடு மார்கழி நீராடல், தை நீராடல் அகிய வளங்கள் மனித இனத்துக்கு கிடைத்த பயன்களாகும் இயற்கையும் மனிதனும் ஒரு புள்ளியில் இணைவதைக் காணமுடிகிறது.

சிந்து வெளி நாகரிகம் Sir John Marshall அவர்களது ஆராய்ச்சியில் (1924 தொடக்கம் 1928) புதைபொருள் கண்டு பிடிப்புக்கள் சிந்துவெளி நாகரிகம் எனக் கொள்ளப்படுகிறது. அடுத்த வருடம் 100 ஆண்டு நிறைவு விழா இடம்பெறும் . முதல் தமிழ் மொழி மூலம் சித்தியடைந்த IAS Balakrishnan 1988 Orissa, Chathiskar, Pakisthan ஆகிய பகுதிகளில் சங்க காலச் செய்திகளைக் காட்ட முனைகிறார். பண்பாட்டுச் செயலாளராகவும் பயணங்கள் மூலமும் தகவல்களைத் தருகிறார் Pakistan தொண்டி குன்றம் ஆகிய பெயர்கள் காணப்படுவதாகக் கூறுகிறார். அதிகாரியாக இருந்தவர் வஞ்சி பூம்புகார் போன்ற பெயர்கள் உள்ளதாக கூறுகிறார் இடப் பெயர்வில் தாயகப் பற்றுக் கொண்டு வடக்கு சென்று தகவல்கள் தந்ததால் தமிழர் பெருமை அளவிடற்பாலது.

கடல் தோன்றமுன் உலகப் பந்து பனிக்கட்டியால் சூழ்ந்திருந்தபடியால் தமிழ் பெயர்கள் Peru, ஈராக், எகிப்து, யாவா போன்ற நாடுகளில் காணப்படுவதன் காரணம் அவர்களால் வீட்டைச் சுமந்திருக்க முடியாதபடியால் எண்ணங்களைகொண்டு சென்றனர். காவடி கறுப்பு சாமி பெயர்கள் அவற்றுட் சிலவாம். தைப் பொங்கல் வீடுகளிலன்றிக் கோயில்களிலும் கொண்டாடப் படும் விழாவாகும். பொங்கல் என்றால் வாய் இனிக்கும். நன்றி பொங்கும் அன்பு பொங்கும். உறவு பொங்கும் ஒற்றுமை பொங்குகின்றது. உழைப்பும் தியாகமும் பொங்குகின்றது. தமிழர் பண்பாடும் கலாசாரமும் சேர்ந்து பொங்குகின்றது.

# பொங்கலோ பொங்கல்



செந்நெற் களனியெலாம் செழிப்புற்று வந்திடுமேல்
பன்னும் உயிரினங்கள் பாரில் பசிநீக்கும்
அன்னம் அளித்திடுவோம் அரியபசி நீக்கிடுவோம்
என்றுசொலிப் பாற்பொங்கல் ஏருழவர் பொங்குகிறார்

எம்கணவர் பொருளீட்டி எம்மையெலாம் காத்திடுவார்
எம்மக்கள் கல்விகற்று எம்நாட்டைக் காத்திடுவார்
எம்நாட்டில் எல்லோரும் இனிதாக வாழவென
எம்நாட்டுப் பெண்களெலாம் இனிதாகப் பொங்குகிறார்

# பாஞ்சாலி சபதம்



துரியோதனன் சபையில் துச்சாதனன் அன்னை திரௌபதியின் துகிலை (சேலையை) உரிந்த வேளையில், பாஞ்சாலி அங்கிருந்த பீஷ்மர் துரோணர் உட்பட ஆன்றோர், சான்றோர் அவர்களிடம் நியாயம் கேட்டும், எவரும் உதவ முன்வராததால் "திக்கற்றவருக்குத் தெய்வமே துணை" என்ற ஆன்றோர் வாக்கிற்கு இணங்க கண்ணன் பரமாத்மாவைச் சரணடைகிறாள். "கண்ணா!, மணிவண்ணா!" என்று கூறி அழைக்கிறாள். பக்தையின் குரல் கேட்டும் சும்மா இருப்பானா கண்ணன்? அருள்மழை பொழிந்தான். அன்னையின் சேலை எல்லையற்று நீண்டு வளர்ந்து கொண்டேபோனது. துச்சாதனன் களைத்து வீழ்கிறான். துரியோதனன் தன் செயலுக்கு வெட்கித் தலைகுனிகிறான். சபையோர் இந்த அதிசயம் கண்டு எழுந்து நின்று ஆர்ப்பரித்தனர; உள்ளம் நெகிழ்ந்தனர்.

இதுவரை கோபத்தினால் கொதித்துக் கொண்டிருந்த வீமன் எழுந்து நின்று சபதம் செய்கிறான். "தேவர்கள் மீது ஆணையாக, தாமரைப்பூவில் வந்துதித்த வேதங்கள் போற்றும் பிரமதேவன் மீது ஆணையாக, திருமகளைப் பாகமாகக் கொண்டவனும் எங்கள் குல தெய்வமுமான கண்ணன் பதமலர் மீது ஆணையாக, மன்மதனைத் தன் நெற்றிக்கண்ணால் சாம்பராக்கியவரும், யமதர்மனை வென்றவருமான சிவபெருமான் பொற்பாதங்கள் மீது ஆணையாக நான் இதனைச் சொல்கிறேன் கேளுங்கள்."

**அநுஜா**

தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன் - தம்பி
சூரத் துச்சாதனன் தன்னையும் ஆங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன் - அங்கு
கள்ளென ஊறும் இரத்தம் குடிப்பேன்

கற்பிற்சிறந்த எங்கள் மனைவியாகிய திரௌபதியைச் சிறிதும் வெட்கமின்றித் தன் தொடைமீது அமரும்படி கூறிய இத்துரியோதனனை மாண்பற்ற ( இந்தச் சபையில் நியாயம் கேட்காது வீரமற்று இருக்கும்) அரசர்கள் முன்பாக யுத்த களத்திலே எங்கள் வலிமையினால் அவன் தொடையைப் பிளந்து கொல்வேன். பாஞ்சாலியின் துகிலைத் துணிந்து களைய முற்பட்ட இவனின் தம்பி துச்சாதனனின் வீரமற்ற கேவலமான தோள்களைப் பிய்த்து எறிவேன். அவனது தோள்களிலிருந்து பெருகும் கள்ளுப்போல இரத்தத்தைக் குடிப்பேன். இந்த உலகில் வாழும் மக்களே இது நிச்சயமாக நடைபெறும். நான் இதனைச் சொல்வதாக எண்ணாதீர்கள். இது தெய்வத்தின் அருளால் என் மனதில் தோன்றிய வார்த்தைகள் ஆகும். அன்னை பராசக்தியே இதனைச் செயற்படுத்துவாயாக. இறையருட் துணையன்றி உலகில் எதுவும் அசையாது என்ற நம்பிக்கை தொன்றுதொட்டே மக்களிடம் இருந்து வருகிறது என்பதை உறுதிப்படுத்துகிறது.

வீமன் இவ்வாறு சொல்லி முடித்ததும் அருச்சுனன் எழுந்து நின்று பின்வருமாறு சொல்கிறான். "இந்தப் பாதகக் கர்ணனை (கர்ணன் தான் பாண்டவரின் மேலாடைகளையும், பாஞ்சாலியின் சேலையையும் களையும்படி சொன்னான்) போரினில் கொல்வேன். தெய்வீகமானவனும் எங்களுடைய சிறந்த நண்பனுமாகிய கண்ணன் பாதக்கமலத்தின் மீது ஆணை. ஹே! பூதலமே (புவியில் வாழும் மக்களே) வரவிருக்கும் பாரதப்போரில் பாண்டவராகிய நாம் செய்யவிருக்கும்

புதுமை நிறைந்த போர்த் தந்திரங்களைச், சாமர்த்தியத்தைக் கண்டு வியப்புறுவீர்களாக!" என்று கூறினான்.

பார்த்தன் எழுந்துரை செய்வான் - இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு - எங்கள்
சீரிய நண்பன் கண்ணன் கழலாணை;
கார்த்தடங் கண்ணி எந்தேவி - அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினும் ஆணை
போர்த்தொழில் விந்தைகள் காண்பாய்!

கடைசியாகப் பாண்டவரின் பத்தினியாகிய திரௌபதி சபதம் உரைக்கிறாள். "ஓம் பராசக்தி மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். எனது கூந்தலைப்பற்றி இழுத்துச் சபைக்குக் கொண்டு வந்தவனும் எனது சேலையைத் துணிந்து கழற்றத் தொடங்கியவனுமாகிய பாவி துச்சாதனின் இரத்தமும் பாவத்துக்கு அஞ்சாத கொடியவனான துரியோதனனின் உடலிலிருந்து வரும் இரத்தமும் கலந்து என் கூந்தலில் பூசிப்பின் வாசனை மிக்க நெய்யைத்தடவித் தலையில் குளித்த பின்பே (கேவலமான அவர்கள் இரத்தத்தைப் பூசிய பின் நெய் தடவுதல் அவசியமே) எனது விரித்தபடி இருக்கும் கூந்தலை வாரி முடிப்பேன். அதற்கு முன்பு எக்காரணம் கொண்டும் வாரி முடிக்க மாட்டேன் என்று திடமாகக் கூறுகிறார்.

தேவி திரௌபதி சொல்வாள் - ஓம்
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்;
பாவிதுச் சாதனன் செந்நீர் - அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து - குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப்பேன் யான் - இது
செய்யுமுன்னே முடியேன் என்றுரைத்தாள்
ஓமென் றுரைத்தனர் தேவர்; - ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்
பூமி அதிர்ச்சி உண்டாச்சு - விண்ணைப்
பூழிப் படுத்தியதாஞ் சுழற்காற்று
சாமி தருமன் புவிக்கே - என்று
சாட்சியுரைத்தன பூதங்கள் ஐந்தும்
நாமும் கதையை முடித்தோம் - இந்த
நானில முற்றும் நல்லின்பத்தில் வாழ்க!

பாண்டவரின் சபதத்தைக் கேட்டுத் தேவர்கள் ஓம் என்று முழங்கினர். அந்த நேரம் வானமும் ஓம் என்று சொல்வது வானத்தில் இடி முழங்கிய பூமியில் அதிர்ச்சி ஏற்பட்டது. தூயவனான தருமனுக்கே இந்த இராய்ச்சியம் உரித்தானது என்று சொல்வது போலப் பஞ்ச பூதங்கள் (விண், மண், காற்று, நெருப்பு, ஆகாயம் ) ஐந்தும் சாட்சி சொல்வது போல இருந்தது.

காலத்திற்குக் காலம் அதர்மம் தலைவிரித்தாடுவது (மேலோங்குவது) உண்டு. இறுதியில் தர்மமே வெல்லும் என்பதைப் பாஞ்சாலி சபதம் மூலம் தெளிவாகிறது. இயற்கை நியதியும் அதுதான்.

# RUBY'S

CATERING

**020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
| --- | --- | --- |





**திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா**

**கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்**

**அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா**





**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton | THISTLE HOTELS more than just accommodating | Holiday Inn

*உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......*

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk



WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.
OPENING HOURS : MON - SAT (10.30 AM - 6.30 PM). SUNDAY (11.30 AM - 6.30 PM)